Registered as a NewsPaper

விலை 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–19 | 03–07–2004 | சனிக்கிழமை | ஓசை –136

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

2004

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9944) 077-6059672



# பௌத்த தர்மத்தைக் காக்கவென வந்த பிக்குகள்

# அதற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றனர்

## பாராளுமன்றத்தில் குழப்பம் விளைவித்ததாகவும் பிக்குகள் மீது சனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

**பௌத்த தர்மத்தைக் காக்கவென பாராளுமன்றம் சென்ற பௌத்த பிக்குகள் பௌத்த தர்மத்திற்கு அபகீர்த்தி உண்டுபண்ணும் நிகழ்வுகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.இவர்கள் பாராளுமன்றத்தில் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றனரென ஜாதிக ஹெலஉறுமய பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ் சாட்டியுள்ளார்.**

கேகாலையில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும் கூறுகையில்; நாட்டிலே தற்போது நல்ல தலைவர்கள் உருவாகுதல் மிகவும் கடினமாகவே உள்ளது.நல்ல தலைவர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு மக்களிடமே உள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியினர் பௌத்த தர்மத்தைக் காக்க வேண்டியதற்கு மாறாகபௌத்த தர்மத்தை விசுவாசிப்பவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி வருகின்றனர்.

இவர்களால் பாராளுமன்றத்தில் பௌத்தம் பாதுகாக்கப்படுவதாகத் தெரியவில்லை இவர்களால் அங்கு பெரும் குழப்பங்களே ஏற்படுத்தப்படுகின்றன. இவ்வாறு கூறுவதற்கு என்னை மன்னிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

(12 ஆம்பக்கம் பார்க்க)

## நாட்டைத் தவறாக வழிநடத்தியதாலேயே தேரர்கள் நேரடி அரசியலில் பிரவேசித்தனர்

### ஜாதிக ஹெலஉறுமய பா.உ.அத்துரலிய ரத்னதேரர்

(கொழும்பு)

நாட்டை நிர்வகிப்பவர்கள் அரசியல் சாசனத்தைப் பயன்படுத்தி தேரர்களையும் நாட்டு மக்களின் எண்ணங்களையும் முழுமையாக தவறான வழிக்கு இட்டுச்செல்ல நடவடிக்கை மேற்கொள்வதாலேயே தேரர்கள் நேரடியாக அரசியலில் பிரவேசித்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனாதிபதி கேகாலையில் உரையாற்றிய வேளை தற்போதுள்ள சிலர் சிங்களபௌத்தத்தை பாதுகாப்பதாக கூறிக்கொண்டு பாராளுமன்றத்திற்குச் சென்று அங்கு பெரும் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளனர். அங்கு சிங்கள பௌத்தம் பாதுகாக்கப்படுவதாக தெரியவில்லை எனத்தெரிவித்தமை குறித்து ரத்ன தேரர் கருத்துத் தெரிவிக்கையில், மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதனால்இன்று சனாதிபதியால் தான் விரும்பியதை செய்யமுடியாதுள்ளதாக அவர்சுட்டிக்காட்டியுள்ளார். சனாதிபதி துவேசமாகப் பேசுவதை

(12 ஆம்பக்கம் பார்க்க)

## விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினரால் தரமற்ற வெதுப்பிகள் கண்டு பிடிப்பு

விடுதலைப்புலிகளின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினரிடம் நேற்று கிளிநொச்சிப்பகுதியில் இயங்கி வரும் வெதுப்பகம் ஒன்றில் உற்பத்தி செய்து விற்பனை செய்த வெதுப்பிகள் பல தரமற்ற நிலையில் அகப்பட்டன.

இவ்வாறான தரமற்ற வெதுப்பிகள் விற்பனை செய்யுமிடத்து நுகர்வோர் அது பற்றிய விபரங்களைத் தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினரிடம் அறியத்தருமாறு கேட்டுள்ளனர்.

## சிறுமி மீது பாலியல் வல்லுறவு; குடும்பஸ்தர் ஒருவர் கைது

(மன்னார்)

மன்னாரில் சிறுமி மீது பாலியல் வல்லுறவு புரிந்த குற்றச்சாட்டின் கீழ் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் சந்திரபுரத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 16வயதுடைய மருமகள் முறையான சிறுமி மீது பாலியல் வல்லுறவு புரிந்த குற்றச்சாட்டின் பேரில் 30வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் மன்னார் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார். மேற்படி சிறுமி வைத்திய பரிசோதனைக்காக அநுராதபுரம் வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (மி)

## காணாமல் போன மாணவி அரசியல் துறையினரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பாடசாலை சென்றவேளை காணாமற்போன மாணவி ஒருவரை யாழ்.அரசியல் துறையினர் கண்டுபிடித்து பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர்.17 வயதுடைய மேற்படி மாணவி கடந்த 26-ஆம் திகதி பாடசாலைக்குச் சென்றவரெனவும் பின்னர் வீடு திரும்பவில்லை எனவும் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது.இவரை யாழ் அரசியல் துறையினர் உடுவில் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து மீட்டு யாழ். நகரஅரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.செழியன் நேற்று மாலை பெற்றோரிடம் ஒப்படைத்தார். (36)

## 29 இலங்கைத் தமிழ் அகதிகள் பொலிசாரிடம் ஒப்படைப்பு

இராமேஸ்வரத்திலிருந்து நாடு திரும்பிய 29 அகதிகளும், அவர்களை படகில் ஏற்றிவந்த 4 படகோட்டிகளும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுக் காலை தலைமன்னாரில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் பொலிசாரிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை இவர்கள் இன்று நீதிபதி முன்நிலையில் ஆஜர் செய்யவுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### இணைப்பு




கரும்புலிகள் நாளை முன்னிட்டு வெளியிடப்படும். வர்ணப் பிரசுரம் இன்றைய ஈழநாதம் மக்கள் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## கரும்புலிகள் உருவப்பட ஊர்தி யாழ்.குடாநாடெங்கும் பவனி

யாழ்.மாவட்ட அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் அனைத்துக் கரும்புலிகளினதும் உருவப்படங்களைத் தாங்கி கப்பல் வடிவிலான அழகிய ஊர்தி ஒன்று யாழ்.குடாநாடு முழுவதும் பவனி வந்தவண்ணம் உள்ளது.நேற்று நல்லூர், யாழ்ப்பாணப் பிரதேசங்களிலும் இவ்ஊர்தி பவனி வந்தது. இவ்ஊர்தி இன்று காலை 8.00 மணி தொடக்கம் 9.30 மணிவரை யாழ்.விளையாட்டரங்கில் தமிழீழ இளையோர் தேசிய தடகள விளையாட்டு விழாவில் வணக்கத்திற்காக நிறுத்தப்பட்டிருக்கும். பின்னர் காலை 9.30-மணிக்கு மானிப்பாய்வீதி வழியாக ஓட்டுமடம் சந்தி, 10.00-மணிக்கு ஆனைக்கோட்டை

(12 ஆம்பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நாளை முன்னிட்டு தமிழீழமெங்கும் ஊர்திப் பவனிகள், விசேட நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

கரும்புலிகள் நாளை தமிழீழமெங்கும் எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் கரும்புலிகள் உருவப்படம் தாங்கிய ஊர்திகள் மாவட்ட ரீதியாக அனைத்துப் பகுதிகளுக்கும் எடுத்துச்செல்லப்பட்டு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளும்ஆரம்பமாகியுள்ளன.

கிளிநொச்சி நகரப்பகுதியில் நேற்று முன்தினம் கரும்புலிகள் நினைவாலயம் அமைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகளும் நடைபெற்றுவருகின்றன அத்துடன் அலங்கார வளைவுகளும் மின் அலங்காரங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மன்னார் நகரப்பகுதி சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதோடு கரும்புலிகளின் திருவுருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி மன்னார் நகரப்பகுதியிலிருந்து ஆரம்பமாகி மக்கள் அஞ்சலிக்காக பவனிவர ஆரம்பித்துள்ளது. அத்தோடு இப்பகுதியில் இறுதி நாள் நிகழ்வினை மன்னார் ஆண்டான் குளத்தில் அனுஷ்டிக்க ஏற்பாடுகளும் செய் யப்பட்டுள்ளன. கரும்புலிகள் நாளன்று அரச, அரச சார்பற்ற

(12 ஆம்பக்கம் பார்க்க)




கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள கரும்புலிகள் நினைவுப் பந்தலில் மக்கள் கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்துவதையும் முல்லைத்தீவில் இடம்பெற்ற கரும்புலிகள் உருவப்படம் தாங்கிய ஊர்வலத்தையும் படங்களில் காணலாம்.

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர்

# கரும்புலிகள் நினைவாக நடத்திய கவிதை, சிறுகதைப் போட்டிமுடிவுகள்

கரும்புலிகள் நாளை முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடாத்தப்பட்ட கவிதை, சிறுகதைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கரும்புலிகள் நாள் அன்று முற்பகல் 11.00மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் அவர்கள் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி கலந்து கொள்கிறார். மேலும் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி.கலைவிழி, பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கஜேந்திரன், திருமதி.பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு.

### கவிதைப்போட்டி முடிவுகள்

| இடம் கவிதைத்தலைப்பு | பெயர், முகவரி |
|---|---|
| 01 விடுதலை மூச்சின் வெகுமதி | செல்வி. செல்வநாயகம் செல்வரஞ்சினி, உயர்தரம்-2005 யாழ்.மெதடிஸ்த பெண்கள் பாடசாலை பருத்தித்துறை. |
| 02. யூலைப்பூக்களில் இது ஒருவகைப்பூக்கள் | செல்வி.கந்தசாமி ஜீவிதா தரம்-12 சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் |
| 03. கரும்புலிகள் | செல்வி.கி.டிலோஜனா தரம்-12 கலைப்பிரிவு யாழ்.நெடுந்தீவு மகா வித்தியாலயம். |
| ப்ராட்டுச் சான்றிதழ் பெறுவோர். | |
| தேசவிடுதலை உணர்வு | செல்வி.சாமிநாதன் மேரிமடோனா யாழ்.நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி. |
| கரும்புலிகள் | செல்வன்.கமலேஸ்வரன் முள்ளிய வாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர் தர வித்தியாலயம் முல்லைத்தீவு. |
| விடிவெள்ளிகளே | செல்வி.பவித்திரா சுப்பிரமணிய ஐயர் உயர்தரம் 2005. கலைப்பிரிவு யாழ்.செங்குந்த இந்துக்கல்லூரி கல்வியன்காடு. |
| ஒலிக்கட்டும் தமிழ்க்கீதம் | செல்வன். நடராசா கண்ணதாஸ் தரம்-11 யாழ்.வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம். |
| விடுதலையின் விழுதுகள் | செல்வி.தி.தர்மினி கிளி/ வட்டக்கச்சி மகாவித்தியாலயம். |
| தலை நிமிர்ந்த தமிழினமே | செல்வி.ம.வானதி யாழ்.சிறிசோமஸ்கந்தா கல்லூரி. |
| கரும்புலி வீரன் | செல்வி.பிறின்சியா ஜெயசந்திரமூர்த்தி கிளி/ மத்திய கல்லூரி கிளிநொச்சி. |
| விடுதலையான கரும்புலி | செல்வி.ம.கரோலினி தரம்-12 கலைப்பிரிவு நெடுந்தீவு மகாவித்தியாலயம். |
| சங்கமமாகும் கரும்புலிகள் | ஜோசப்பின் சியார்னி லூக்காஸ் புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம். |
| உலகம் வியக்கும் எம் உயிராயுதங்கள் | செல்வன்.சிவநேசன் திருக்குமார் ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை |
| சிறப்புப் பரிசு:- "தயாராகுவோம்" | திரு.க.றொபேர்ட் இல.4825 கு4 களுத்துறை சிறைச்சாலை களுத்துறை. |

### சிறுகதைப் போட்டி முடிவுகள்

| இடம் | சிறுகதைத் தலைப்பு | பெயர்.முகவரி |
|---|---|---|
| 01. | காத்திருப்பு | திரு.நீதிவேந்தன் அறிவமுது பொத்தகசாலை முள்ளியவளை. |
| 02. | நிழல் ஓவியங்கள் | திரு.கா.சுயந்தன் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கிளிநொச்சி. |
| 03. | சீதன வீடு | சி.செம்பருதி சுதந்திரபுரம் உடையார்கட்டு முல்லைத்தீவு |
| பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்:- | | |
| | என் உயிர்த் தோழனே | ஜெ.எம்.ஜெனிற்றா நல்லாயன் வீதி,இளவாளை. |
| | விண்வெளிப்போர் | வி.தேவபானு உடையார்கட்டு வடக்கு உடையார்கட்டு. |
| | விடுதலை வேட்கை | திருமதி.மு.மாலாதேவி அளவெட்டி மத்தி அளவெட்டி |
| | ஒருபோராளியின் கதை | த.பிரபாயினி மட்டுவில் கிழக்கு மட்டுவில் |
| | சங்கமம் | ஏழுமலை மூவேந்தன் நிமலன் புகைப்படக் கலையகம் மல்லாவி |
| | ஏன் வந்தான் | கி.சோ.பதந்தன் 37/3 மானிப்பாய் வீதி தாவடி. |
| | பழைய முகமூடியுடன் முகங்கள் | நடராசா வினோதரன் ஒட்டு வெளி மிருசுவில். |
| | வெற்றித் திலகம் | செல்வி.தர்மினி பத்மநாதன் யாழ் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம். |
| | திணிப்பு | தேவி பரமலிங்கம் நாவலடி ஒழுங்கை வண்.பண்ணை வடமேற்கு. |
| | தவநெறி | சிவகுமார் சிவரூபன் தரம் -13 யாழ்.சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயம். |

வெற்றிபெற்றோர் 2223768, 2223942 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அல்லது நேரடியாக வந்து உறுதி செய்து கொண்டு பாராட்டுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (36)

# தமிழீழ நுண்கலைக் கல்லூரியினால் சிறப்புற நடத்தப்பட்ட முழுநிலாக்கலையரங்கு

(அலுவலகசெய்தியாளர்)

கிளி.மாவட்ட அரசியல் துறையினரதும் கிளி. அழகியல் கலாமன்றத்தினரதும் ஆதரவில் கிளி.தமிழீழ நுண்கலைக்கல்லூரியினரால் நடத்தப்பட்ட முழுநிலா கலையரங்கு நிகழ்வு நேற்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழீழ நுண்கலைக் கல்லூரியைச் சேர்ந்த தணிகைமாறன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 5.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் ஆரம்பநிகழ்வாக தமிழீழ தேசியக் கொடியினை புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் ஏற்றி வைத்தார். மங்கல விளக்கினை இசைஞானதிலகம் இராதாகிருஸ்ணன், கிளிநொச்சி வர்த்தக சங்கத் தலைவர் நவரட்ணராசா ஆகியோர் ஏற்றிவைக்க மண்டபக் கலை நிகழ்வு ஆரம்பமாகியது.

வித்துவான் இசைஞானதிலகம்




இராதாகிருஸ்ணன் குழுவினரின வயலின் இசைக் கச்சேரி நிகழ்வு இடம்பெற்றது தொடர்ந்து சிறப்புரையினை புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் வழங்கினார் தொடர்ந்து அறிமுகமும் உருமுகமும் சிறப்பு நாடக அரங்கு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# சர்வதேச மாணவர் பேரவையின் தொடர் கருத்தரங்கு நாளை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் நாளை தொடர் கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன. காலை 10.00 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் கலாநிதி க.சிதம்பரநாதன் (துறைத்தலைவர் நுண்கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்) வழங்கும் தாயக விடுதலைப்போராட்டத்தில் பண்பாட்டுச் செயற்பாட்டின் பங்களிப்பு என்னும் கருப்பொருளிலும் மாலை 3.30 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் கலாநிதி ப. பஸ்பரட்ணம் வழங்கும் "தொல்லியல் நோக்கில் ஈழத்தின் தமிழ் அரசு உருவாக்கம்" எனும் கருப்பொருளிலும் மாலை 4.00 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய மண்டபத்தில் எஸ். வரதராஜன் (B.A.Hons) வழங்கும் யுத்தநிறுத்தத்தின் பின்னான தமிழ்மக்களின் சமூக பொருளாதார மாற்றமெனும் கருப்பொருளிலும் கருத்தரங்கினை மேற்கொள்வதற்குச் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் ஏற்பாட்டினை மேற்கொண்டுள்ளனர். (36)

## வவுனியா நகரில் உள்ள சிறுவீதிகள் புனரமைப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா நகரில் நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாதிருந்த சிறு வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா நகரிலுள்ள மில்வீதி, சூசைப்பிள்ளையார் குளவீதி, சந்தை உட்புற வீதி, கந்தசாமி கோவில் வீதி ஆகியன நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்தமையால் பல வீதி விபத்துச் சம்பவங்கள் இடம் பெற்றன.

இதனைத் தடுக்கும் முகமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இவ்வீதிகள் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளன. (10)

## கணினி அன்பளிப்பு

(வவுனியா)

அண்ணா நகர் பரமேஸ்வரா வித்தியாலயத்திற்கு அண்ணா நகரில் உள்ள ஏ.பி கோழிப் பண்ணை உரிமையாளரால் ஒரு நவீன கணினிஅன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையத்தில் இருந்து வரும் மாணவர்கள் கணினி பற்றிய அறிவைப்பெற இது பெரும் வழி வகுத்துள்ளதாக பாட சாலை அதிபர் திருமதி.எல்எவ் நடேச மூர்த்தி தெரிவித்துள்ளார். (10)

# கரும்புலிகள் நினைவாக வல்வையில் பேருந்து தரிப்பிடம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நாளை ஒட்டி வடமராச்சி வல்வெட்டித்துறையில் உள்ள வல்வை மகளிர் கல்லூரிக்கு முன்பாக பஸ் தரிப்பு நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

கரும்புலிகள் நாள் நினைவாக இவ் பஸ்தரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை வடமராச்சிப் பிரதேச அரசியல்துறையினரும், தேசியஎழுச்சிப்பேரவையினரும், பொது அமைப்புக்களும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இவ் பஸ் தரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. (33)

# முள்ளியவளைப்பிரதேசத்திற்கான கிராமிய அபிவிருத்தி வங்கி திறப்பு

(முல்லைத்தீவு)

முள்ளியவளைப் பிரதேசத்திற்கான கிராமிய அபிவிருத்தி வங்கி நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இத்திறப்புவிழாநிகழ்விற்கு கிராமிய அபிவிருத்தி வங்கி முகாமையாளர் தவக்குமார் தலைமை தாங்கினார்.

மங்கல விளக்கினை மாவீரர் நடேசன்மாமாவின் துணைவியார் பரமேஸ்வரி மாவீரர் இந்திரச்செல்வனின் தந்தையார் திருச்செல்வம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றினார்.

வங்கிக்கான பெயர்ப்பலகையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் திரைநீக்கம் செய்து வைத்தார். வங்கிக்கிளைக்கான கட்டடத்தினை கௌரவ வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் க.கனகரத்தினம் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து சிறப்புரையினை முல்லை. பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் பொருளாளர் தி.சிவபாதம், கிராமிய அபிவிருத்தி வங்கி பணிப்பாளர் சபை உறுப்பினர் தாமோதரம் பிள்ளை, கிராமிய அபிவிருத்தி வங்கிப்பணிப்பாளர் சுயின், தமிழீழ அபிவிருத்தி நிறுவன உத்தியோகத்தர் திரு. மகாதேவராசா, செயற்திட்ட இணைப்பாளர் கணேசலிங்கம்,கமக்கார அமைப்பு சார்பாக ஜெகதீஸ்வரன் ஆகியோர் நிகழ்த்த சிறப்புரையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் நிகழ்த்தினார்.



தொடர்ந்து கடன் வழங்கல் நடைபெற்றது வசந்தராசா, பாக்கியநாதன், செபஸ்ரியாம்பிள்ளை சவரிமுத்து-செபமாலை ஆகியோர் உழவு இயந்திரத்தினைக் கடனாக பெற்றுக் கொண் டனர்.மு.பொ.அ. நிறுவனத்தின் கடன்களும் வழங்கப்பட்டது.

இந்தநிகழ்வில் விவசாயிகள், துறைசார் பொறுப்பாளர்கள், மு.பொ.அ.நி. பணிப்பாளர்கள், த.பொ.மே. நிறுவனப் பணியாளர் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# அவுஸ்திரேலிய பொதுத்தேர்தல் திகதி நிர்ணயிக்கத் தயக்கம்

## -தோல்வி குறித்துப் பிரதமருக்கு அச்சம்

(சிட்னி)

**அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன்ஹவாட் பொதுத் தேர்தலை எப்பொழுது நடத்துவது என்பது பற்றித் தாம் இன்னமும் தீர்மானிக்கவில்லையென்று தெரிவித்துள்ளார்.**

அடுத்த மாதம் தேர்தல்கள் நடத்தப்படுமோ என நிலவும் ஐயப்பாட்டினை அவர் தற்போது நிராகரித்துள்ளார்.

பொதுத் தேர்தல் ஆகஸ்ட் மாதம் 7ம் திகதியளவில் நடத்தப்படும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தினத்தில் தேர்தல் நடத்துவதாயின் தேர்தல் பற்றிய அறிவித்தல் அடுத்த மூன்று நாட்களுக்குள் வெளியிடப்படவேண்டுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமமந்திரி ஜோன் ஹவாட்டின் கொன்சவேட்டிவ் கட்சிக்கும் எதிர்கட்சியான தொழிற் கட்சிக்குமி டையே தேர்தலில் கடும் போட்டி உள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின் றன.

எனினும் ஈராக்கிலுள்ள அவுஸ்திரேலியா படையினரை தாம்ஆட்சிக்குவந்தால் திருப்பப் பெறப்போவதாக எதிர்க்கட்சி வலியுறுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக் கது.

இதேசமயம் அவுஸ்திரேலியாவில் இறுதியாக பொதுத் தேர்தல் 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடத்தப்பட்டது.

தேர்தலின் போது தேர்ந் தெடுக்கப்படும் அரசாங்கம் மூன்று வருடங்களுக்கு பதவிவகிக்க முடியும் எனினும் அந்தப் பதவிக்காலம் முடிவடைய முன்னர் ஆட்சியில் உள்ள அரசாங்கம் விரும்பினால் தேர்தலை முன்கூட்டி நடத்தமுடியும்எனவும் தெரிவிக்கப்படுகிறது.



கடந்த வருடம் சீனாவில் ஏற்பட்ட சார்ஸ் நோயைக் கட்டுப்படுத்தத் தவறியதால் அதிகாரி ஒருவர் இராஜினாமாச் செய்ததை நினைவுகூரும் முகமாக பீஜிங்கில் முகமூடியணிந்து வீதியில் நடந்துவரும் பெண்கள்.

# அமெரிக்க-வடகொரிய வெளியுறவு அமைச்சர்கள் மட்டச் சந்திப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் வடகொரிய வெளிவிவகார அமைச்சர் பேக்னாம் சென்னை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

வடகொரியாவுடன் இரண்டு வருடங்களுக்கு முன்னர் அணுவாயுதம் தொடர்பான சர்ச்சை ஏற்பட்ட பின்னர் இடம்பெற்ற உயர்மட்ட சந்திப்பு இதுவாகுமென்று அமெரிக்கப் பேச்சாளர் ஒருவர்தெரிவித்துள்ளார்.

இறுதியாக சீனத்தலைநகரில் நடைபெற்ற ஆறு நாடுகள் கலந்து கொண்டமாநாட்டின்போது முன்வைக்கப்பட்ட யோசனைகள் இந்தச் சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# “புஷ் உலகப் பயங்கரவாதி, குற்றவாளி இப்போதும் ஈராக் சனாதிபதி நானே”

## -நீதிமன்றில் சதாம் திட்டவட்டமாக அறிவிப்பு



(பாக்தாத்)

உலகில் தீவிரவாதியும், பயங்கரவாதியும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்தான். இவ்வாறு நேற்று முன்தினம் ஈராக்கின் நீதிமன்றத்தில் விசாரணைகளின் போது ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம்ஹுசைன் கூறியுள்ளார்.

நீதிபதி முன் அவர் கூறியதாவது; நான்தான் ஈராக் நாட்டின் சனாதிபதி எந்த ஆக்கிரமிப்பாளரும் என்னிடம் இருந்து அந்தப்பதவியை பறித்து விட முடியாது.

1990இல் நான் குவைத்தை ஆக்கிரமித்ததாகக் கூறப்படும் குற்றச் சாட்டு தவறானது. ஈராக் பெண்களை சிறு தொகைப் பணத்திற்காக விபச்சாரியாக்கும் முயற்சியில் குவைத்காரர்கள் ஈடுபட்டார்கள். அப்படிப்பட்ட நாய்களுக்கு நீங்கள் எப்படி ஆதரவாக இருக்கலாம்.

1988இல் விச வாயு செலுத்தி ஆயிரக்கணக்கான மக்களை கொன்றதாகஎன்மீது குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. அந்த சம்பவத்திற்கும் எனக்கும் சம்பந்தம் கிடையாது. இந்த நீதிமன்றம் ஒரு நாடக மேடை இங்கு நான் குற்றவாளி அல்ல அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் தான் உண்மையான குற்றவாளி.

அனைவரும் கூறுகிறார்கள் நான் ஜெனிவாவில் (சுவிட்சாந்து) இலட்சக்கணக்கான டாலர் பதுக்கி வைத்து இருப்பதாக அமெரிக்கர்களும் சொல்கிறார்கள் அப்படி என்றால் நான் ஏன் வக்கீல் வைத்துக்கொள்ள முடியாது இவ்வாறு சதாம்கூறினார்.

விசாரணை முடிந்ததும் சதாம் மீண்டும் கைவிலங்கிட்டு அமெரிக்க இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்டார். சதாம் கைது செய்யப்பட்ட போது இருந்ததை விட மெலிந்து காணப்பட்டார். அவர் தாடியை கத்தரித்து டிரிம் செய்து இருந்தார். கண்களுக்கடியில் கறுப்பு வளயம் காணப்பட்டது. சதாம் ஹுசைன் மீதான புகார்கள் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டால் சதாமுக்கு மரணதண்டனை கிடைக்கும் ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்ததிலிருந்து அங்கு மரணதண்டனை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீண்டும் மரணதண்டனையை அமுலுக்குக் கொண்டுவர பிரதமர் அல்லாவியின் இடைக்கால அரசு விரும்புகிறது.

# படையினரை ஈராக் அனுப்ப ஜோர்தான் பரிசீலிக்கத் தயார்

ஜோர்தான் தனது துருப் புக்களை ஈராக் அனுப்புவது பற்றி பரிசீலிக்கத் தயாராகவுள்ளது என்று கூறியுள்ளது.ஈராக்கில் புதிதாக அமைந்துள்ள இடைக்கால அரசு கோரிக்கை விடுத்தால் அது பற்றி பரிசீலிக்கத் தயாராகவுள்ளதாக ஜோர்தான் மன்னர் அப்துல்லா கூறியுள்ளார். ஈராக்கிற்கு தனது துருப்புக்களை அனுப்புவது பற்றி தாம் எவ்வித கருத்துக்களும் கொண்டிருக்கவில்லை. ஆனால் ஈராக் கோரிக்கை விடுக்கு'மானால் அதனை மறுக்கமுடியாது என்று கூறியுள்ளார்.ஜோர்தான் மன்னரின் அறிவிப்பு சதாம் ஹுசைனின் நீதிமன்ற விசாரணைகளை..டுத்தே வெளியாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இருவேறு பகுதிகளில் நிலநடுக்கம் துருக்கியில் 25 பேர் உயிரிழப்பு

(அங்காரா)

துருக்கியில் நேற்று இருவேறு இடங்களில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் 25 பேர் உயிரிழந்ததுடன், 50 பேர் காயமடைந்துள்ளனர்.

துருக்கியின் வடகிழக்கு மாகாணமான அகரியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது றிக்டர் அளவு கோ'லில் 5.1 என்று பதிவாகிய இந்த நிலநடுக்கத்தினால் 20 பேர் மரணமடைந்துள்ளனர். 40 பேர் காயமடைந்துள்ளனர்.

நூற்றிற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. இதனால் ஏராளமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

அத்துடன் அருகிலுள்ள மூன்று கிராமங்கள் பலத்த சேதமடைந்துள்ளன.இதேபோல் கிழக்கு துருக்கியில் ஏர்சுரம் மாகாணத்திலும் நிலநடுக்கம் ஏற்பட்டதில் ஐந்துபேர் பலியாகியுள்ளனர். 10 பேர் காயமடைந்துள்ளனர்.



பாக்தாத்தின் இடைக்கால அரசு பதவியேற்ற பின்னர் அங்கு ரோந்துப்பணியில் ஈடுபடும் ஈராக்கியத் தேசியப் படைவீரர்.

### தீவிர ஆர்வம்

(புதுடில்லி)

இந்தியாவுடன் கண்ணாடி, நாரிழை உள்ளிட்ட தொலைத் தொடர்பு வசதிகளை பாகிஸ்தான் மேம்படுத்திக் கொள்ள தீவிர ஆர்வம் காட்டுகின்றது.இவ்வாறு பாகிஸ்தான் சென்று, புதுடில்லி திரும்பியுள்ள மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் தயாநிதிமாறன் கூறியுள்ளார்.தொலைத் தொடர்பு மாநாட்டில் பங்கேற்க தயாநிதி மாறன் நேற்று முன்தினம் பாகிஸ்தான் சென்றிருந்தார்.அங்கு பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப்புடன் கலந்துரையாடினார்.

# ஆசியான் நாடுகள் அமைப்பில் பாகிஸ்தானுக்கு விரைவில் இடம்

(ஜகார்த்தா)

ஆசியான் அமைப்பில் 24ஆவது உறுப்புநாடாக பாகிஸ்தான் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது. இதனை முன்னிட்டு கருத்துக்கூறியுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் ஆசியான் அமைப்பில் பாகிஸ்தான் இணைந்து கொண்ட பின்னர் இருதரப்பு பிரச்சினைகளை எழுப்பமாட்டாது என்று இந்தியா நம்பிக்கை கொண்டுள்ளதாகக் கூறியுள்ளார். பாகிஸ்தானுடனான அனைத் துப்பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பது என்பதே இந்தியா வின் நீண்டகாலக் கொள்கை என்றும், ஜகார்த்தா போஸ்ட் பத்திரிகைக்கு நேற்று முன்தினம் பேட்டியளிக்கையில் கூறியுள்ளார்.

# ‘பொடோ’ சட்டம் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டும்

## மத்திய அமைச்சர் வலியுறுத்து

(புதுடில்லி)

பொடோ சட்டம் உடனடியாக இரத்துச்செய்யப்பட வேண்டுமென்று இந்திய மத்திய சட்ட மற்றும் நீதித்துறை இணை அமைச்சர் வெங்கடபதி கூறியுள்ளார்.பொடோ சட்டம் வரும் அக்ரோபர் மாதத்தில் தானாகக் காலாவதி ஆகிவிடும் எனத் தெரிவித்த அவர், அரசியல் நோக்கத்திற்காக இந்தச்சட்டம் பயன்படுத்தப்படும் ஆபத்து இருப்பதால் கட்டாயம் இதனை இரத்துச் செய்யவேண்டுமென புதுடில்லியில் ஒரு பேட்டி ஒன்றில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேற்படி பொடோ சட்டத்தின் மூலம் தமிழகத்தின் பல தலைவர்களை முதலமைச்சர் ஜெயலலிதா கைதுசெய்து நீண்ட காலமாகச் சிறையிலிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.



பாக்தாத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் எரியும் பேருந்தை அணைப்பதற்கு விரையும் தீயணைப்புப் படைவீரர்.

# புனரமைப்பு பூர்த்தியாகாத நிலையில் தேறாங்கண்டல் பொது நோக்கு மண்டபம்

(மல்லாவி)

**தேறாங்கண்டல் கிராமத்தில் வடக்கு-கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (நியாப்) கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட பொதுநோக்கு மண்டப வேலைகள் பூர்த்தியடையாத நிலையிலிருந்து வருகின்றது.**




படம் அன்ரனி

மேற்படி பொது நோக்கு மண்டபம் 2002ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் அத்திவாரம் இடப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டுள்ள போதிலும் வேலைகளில் சில பகுதி முடிவு பெறாத நிலையில் காணப்படுகின்றது.

துணுக்காய்ப் பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட தேறாங்கண்டல் கிராமத்தில் பல இலட்சம் ரூபாய் செலவில் குளம் வீதிகள், பொதுக் கிணறு என பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் பொது நோக்கு மண்டபமும் ஒன்றாகும்.

பூர்த்தியாகமாலுள்ள இக்கட்டடமானது கட்டாக்காலி ஆடு, மாடுகள் தங்கும் மண்டபமாக மாறியுள்ளது. மண்டபத்தைச் சுற்றி பற்றைக் காடுகள், புற்கள் என்பன வளர்ந்தும் உள்ளது. கவனிப்பாரற்ற நிலையில் உள்ள மேற்படி பொது நோக்கு மண்டபம் கடந்த 2004.06. 14 ஆம் திகதி தேறாங்கண்டல் கிராம அபிவிருத்தி சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பகுதி வேலைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து பூர்த்தி செய்து தருமபடி மக்கள் கேட்கின்றனர். (24)

# முல்லை. நுண்கலைக் கல்லூரியின் ஆனிமாதக் கலை விருந்து



படம் தவரட்ணம்

(புதுக்குடியிருப்பு)

முல்லை. மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஆனி மாதக் கலை விருந்து கடந்த புதன்கிழமை மாலை 5 மணியளவில் புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மண்டபத்தில் நுண்கலைக் கல்லூரிகளின் பொறுப்பாளர் கண்ணதாசன் அவர்களின் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரை நவம் அறிவுக்கூடப் பணிப்பாளர் கலைக்கோன் அவர்கள் ஏற்றிவைக்க, தேசியக் கொடியை புலிகளின் குரல் பொறுப்பாளர் ந.தமிழன்பன் அவர்கள் ஏற்றிவைத்தார். அத்துடன் சிறப்புரையும் ஆற்றினார்.

சிறப்பு நிகழ்வாக நவம் அறிவுக்கூட மாணவர்களினதும், காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்களினதும், தாளவாத்தியக் கச்சேரியும், சங்கீதபூஷணம் பி.குமாரசாமி அவர்கள் உள்ளிட்டோரின் சிறப்புத் தமிழிசை விருந்தும் இடம் பெற்றது. (08)

# பலநோக்கு மண்டபம் திறப்பு

(ஒட்டுசுட்டான்)

நியாப் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பலநோக்கு மண்டபம் ஒலுமடு மயைக் கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை காலை 10.30 மணியளவில் ஒலுமடு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் வ.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை ஒலுமடு கிராம அலுவலர் நா. நந்தகோபாலன் ஏற்ற தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் ஏற்றினார்.

மங்கல விளக்கினை வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் உட்பட பலர் ஏற்றினர் மண்டப நாடாவினை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், வவுனியா மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் தி.ஞானவேல் அவர்களும் வெட்டித் திறந்து வைத்தனர்.

கருத்துரைகளை வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் தி.ஞானவேல் வவுனியா மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ், வன்னிமாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், செட்டிகுள நீர்ப்பாசன பொறியியலாளர் என்.சுதாகரன், வவுனியா மாவட்ட நியாப் திட்ட பிரதிப் பணிப்பாளர் எந்திரி கே.எஸ் சிவபாதம் ஆகியோர் வழங்கினர். (05)

## சிரமதானம்

(கிளிநொச்சி)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்தியில் இருந்து வட்டக்கச்சிக்கு செல்லும் பிரதான வீதியின் அருகில் காணப்படும் பற்றைகள் மருதநகர் பிரதேச மக்களால் கிராம சேவகரின் ஒழுங்குபடுத்த லில் சிரமதானப் பணி மூலம் துப்பரவாக்கப்பட்டு வருகின்றது. (15)


## மெய்வல்லுநர் போட்டி

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவுடன் பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் கிராஞ்சி-பிருந்தாவனம் அலைகள் முன்பள்ளி வருடாந்த திறனாய்வுப் போட்டி அண்மையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது. நிகழ்வின் முடிவில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது.

# அடிப்படை வசதிகளின்றி அல்லற்படும் மக்கள்

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசத்தில் L.K.S வீதியில் இருக்கும் 08 குடும்பங்கள் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி நிலையான இருப்பிடங்கள் இல்லாமல் மேற்படி வாய்க்கால் கரைகளில் சிறு கொட்டில்கள் அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.



இம்மக்கள் யாழ்.மாவட்டத்தில் வெவ்வேறு பகுதிகளிலிருந்து சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்தவர்கள் ஆகும். மீளவும் இவர்களின் வாழ்விடங்கள் இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் என்பதால் மீளவும் சென்று குடியமரமுடியாத நிலையில் இருக்கும் மக்கள் எந்தத் தொழிலுமின்றி அரச நிவாரணத்தையே நம்பியிருக்கின்றனர். தற்சமயம் எந்த நிறுவனங்களினாலும் கவனிக்கப்படாத நிலையிலிருந்து வருகின்றனர். மலசல கூட வசதிகள் குடிநீர் பிரச்சினையாலும் அவதிப்பட்டு வரும் இம் மக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்படி குடும்பங்களை வேறு ஒரு இடத்தில் குடியமர்த்த முன்வருவார்களா என மக்கள் கேட்கின்றனர். (24)

# கரும்புலிகள் நாள் ஏற்பாடு குறித்து ஒட்டுசுட்டானில் கலந்துரையாடல்

(ஒட்டுசுட்டான்)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்நிகழ்வு ஒட்டுசுட்டான் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் வே.தயாபரன் தலைமையில் நடைபெற்றது. பொதுச் சுடரினை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் திருமதி ந.செல்வராசா ஏற்ற, தேசியக் கொடியினை கற்சிலைமடு வலய பொறுப்பாளர் கதிர் ஏற்றியதைத் தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெற்றது.

சமகால அரசியல் நிலைப்பாட்டையும் கரும்புலிகள் நாளை சிறப்புற நடாத்துவது பற்றியும், ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் ஈழவன் கருத்துக்களை வழங்கினார். இதில் துறை சார்ந்த அதிகாரிகளும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர் ஆசிரியர், வர்த்தகர் என பலரும் கலந்து கொண்டனர். (05)

## 13.9மில்லியன்ரூபா ஒதுக்கீடு

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனைக் கிராமத்திலுள்ள 831 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரம் பேரின் தேவை கருதி கார்ப் நிறுவனம் 13.9 மில்லியன் ரூபா செலவில் குழாய் மூலமான குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ள முன்வந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் நீண்டகாலமாக தண்ணீர் பற்றாக்குறை இருந்து வருகிறது. இதனைக் கருத்திற் கொண்டே மேற்படி நிறுவனம் குழாய்க் கிணறுகளை அமைக்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.. (மி)

# வடமாகாண உரக்களஞ்சியம் பரந்தனில் திறந்துவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இலங்கை உரக்கம்பனியின் வடமாகாண ஏகவிநியோகத்தராக நியமிக்கப் பெற்றுள்ளதுடன், நேற்று காலை உரக் களஞ்சியமும் திறந்து வைக்கப்பெற்றது.



படம் சோதி

நேற்று காலை 10.00 மணிக்கு உரக்களஞ்சியத் திறப்பு நிகழ்வு சங்கத் தலைவர் மா.நடராசா தலைமையில் பரந்தனில் நடைபெற் றது. மங்களவிளக்கினை கிளி.மாவட்ட நிர்வாகசேவை கூட்டுறவு இணைப்பாளர் மயூரன், கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் க.செல்வராசா ஆகியோர் ஏற்றிவைக்க, இலங்கை உரக்கம்பனியின் வடகிழக்கு மாகாண சந்தைப்படுத்தல் முகாமையாளர் க.சிதம்பரநாதன் உரக்களஞ்சியத்தினை சம்பிரதாயபூர்வமாக நாடாவினை வெட்டி திறந்துவைத்தார்.

வன்னி வாழ் விவசாயிகள் கட்டுப்பாட்டு விலையில் உரத்தினை பெற்றுக் கொள்ளும் வகையில் மேற்படி களஞ்சியம் கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கத்தினரால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 வருட காலமாக இலங்கை உரக் கம்பனியின் களஞ்சியங்கள் முருங்கன், வவுனியா, முல்லை, கிளிநொச்சி, காங்கேசன் துறை, வரணி ஆகிய பகுதிகளில் இயங்காதுள்ளமையின் காரணமாக இப்பகுதி விவசாயிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தே.எ.பேரவையின் கிராமியக் கிளைகள் மன்னாரில் புனரமைப்பு

(மன்னார்)

மன்னாரில் தற்சமயம் தேசிய எழுச்சிப் பேரவையின் கிராமியக் கிளைகளை புனரமைக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை மன்னார் நகர அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. முடியரசன் அவர்கள் மேற்கொண்டுள்ளார். 18 வயது நிரம்பிய ஆண்களும், பெண்களும் மேற்படி தேசிய எழுச்சிப் பேரவையின் கிளைகளில் சேர்ந்து கிராம மட்டத்திற்கு சமூக தொண்டர்களையும் சிரமதானப் பணிகளையும் மிகவும் ஆர்வத்துடன் செய்துவருகின்றனர். (மி)

# இந்தியாவில் வீதிவிபத்து வட்டக்கச்சி வாசி மரணம்

இந்தியாவில் இடம் பெற்றவீதிவிபத்தொன்றில் வட்டக்கச்சி வாசியான சச்சிதானந்தசிவம்-ஞானசீலன் என்பவர் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியைச் சொந்த இடமாகக் கொண்ட சச்சிதானந்த சிவம் அவரது மனைவி, அவரது மகன் ஞானசீலன் ஆகியோர் இந்தியாவிற்குச் சென்றிருந்தனர். இவரது மகனான இராகுலன் அவுஸ்திரேலியாவிலிருந்து இந்தியா வந்திருந்தார். அவரைப்பார்க்கச் சென்ற இவர்கள் கார்ஒன்றில் திருப்பதிக்குச் சென்றவேளை அக் கார் விபத்துக்குள்ளானது. இதில் படுகாயமடைந்த ஞானசீலன் மரணமடைந்ததோடு ஏனைய அனைவரும் காயமடைந்துள்ளனர்.

# பொதுக் கட்டடங்களை ஆக்கிரமித்துள்ள படையினரை வெளியேற்ற நிர்ப்பந்தம்

## இயல்பு வாழ்வு பாதிப்பதையிட்டு மக்கள் விசனம்

(தென்மராட்சி)

**வடமராட்சி, அம்பன் சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்புப் பகுதிக்குள் இருக்கும் வைத்தியசாலை கமநலசேவை நிலையம், நூல்நிலையம் ஆகியவை இயங்காமல் இருப்பதால் இப்பகுதி மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி இருக்கிறது.**

இப்பகுதியில் மக்களை சந்திக்கச் சென்ற தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரிடம் இப்பகுதி மக்கள் இது குறித்து எடுத்துக்கூறினர். இதைக் கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்

அத்துடன் இராணுவப் பகுதிக்குள் இவ் அலுவலகங்கள் சிக்கிக் கிடப்பதால் மேற்படி அலுவலகங்களை உடனடியாகத் திறந்து அப்பகுதி மக்களின் குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் ஒன்றை சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சுக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார். (28)

# அடிப்படை வசதிகள் இன்மையால் வைத்திய விடுதிகள் செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

சீரான மலசலகூட வசதி இன்மை காரணமாக கைதடி சித்த ஆயுர்வேத வைத்திய சாலையில் சில வைத்திய சாலைகள் இயங்க முடியாத சூழ்நிலையால் மூடிவைக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி வைத்தியசாலையின் சுகாதார நிலைமையைக் கவனத்தில் கொண்டு மலசல கூட வசதிகள் சீராக்கப்படாமையால் ஏற்பட்டுள்ள இந்நிலைமை காரணமாக வைத்தியசாலை விடுதிகளில் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது. இதனால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இவ்விடயம் சம்பந்தமாக கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு பலதரப்பினரிடமும் கோரியும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (33)

## பொதுச் சந்தை புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வியங்காட்டு பொதுச்சந்தை தற்பொழுது துரிதமாகப்புனரமைக்கப்பட்டு வருகின்றது.

சுமார் 70 இலட்சம் ரூபாவில் யாழ். மாநகர சபையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இப் புனரமைப்புப் பணிகளில் இச் சந்தையில் நவீன சந்தைக் கட்டடம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. (33)

# தென்மராட்சியில் பல்வேறு பகுதிகளில் கரும்புலிகள் நாளை சிறப்பிக்க ஏற்பாடு

(தென்மராட்சி)

தென்மராட்சி, கைதடி, சாவகச்சேரி,சங்கத்தானை, அரசடி, மீசாலை, புத்தூர்ச் சந்தி, கொடிகாமம், மிருசுவில், எங்கிலும் கரும்புலிகள் நாளைக் குறிக்கும் பதாகைகள் மற்றும் சிவப்பு மஞ்சட் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருக்கின்றன.

இந்தநாளை உணர்வெழுச்சியாகக்கொண்டாட தென்மராட்சியின் அனைத்துப் பகுதிகளும் தயாராகி வருகின்றன.

இது குறித்து மக்களுக்கு, விளக்க உரைகள் தேசிய எழுச்சிப் பேரவையினர் ஊடாகவும் தமிழீழ அரசியல்துறையினர் வாயிலாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கொடிகாமத்திலும், சாவகச்சேரியிலும் பிரமாண்ட அளவில் கூட்டங்கள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன .அதற்கான ஒழுங்குகளில், தமிழீழ அரசியல் துறையினரும் ,தேசிய எழுச்சி பேரவையினரும் பொது அமைப்புக்களின் ஒன்றியங்களும் வணிகர் சங்கங்களும் ஈடுபட்டுள்ளன. சாவகச்சேரி பேருந்து நிலையத்திலும் கொடிகாமம் பேருந்து நிலையத்திலும்சிறப்புக் கூட்டங்கள் இடம் பெறவுள்ளன. (28)

## கரும்புலிகள் நாளை முன்னிட்டு தேசிய எழுச்சிப் பேரவை கூடல்

(தென்மராட்சி)

மிருசுவில் சுற்றுவட்டார தேசிய எழுச்சிப் பேரவையின் கூட்டம் கெற்பெலி முன்பள்ளியில் இடம் பெற்றது.இந்த நிகழ்விற்கு பேராளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் இன்றைய அரசியல் நிலை குறித்தும், ஜூலை ஐந்து கரும்புலிகள் தினத்தை வெகுசிறப்பாக முன்னெடுப்பது என்றும் உறுதி ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில் கொடிகாமம் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் ரத்தினம் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். (28)

# மாநகர சபையின் போக்கால் மக்கள் மத்தியில் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள நாயன்மார் வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புக்கள் எதுவும் செய்யப்படாத நிலையில் பெரிதும் சேதமடைந்து காணப்படுகிறது.

இதனால் இவ்வீதி ஊடாக போக்குவரத்துச் செய்வோர் பல்வேறு இன்னல்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இவற்றைக் கருத்திற் கொண்டு இவ்வீதியைப் புனரமைப்பு செய்யுமாறு கோரியும் யாழ். மாநாகர சபை உரிய நடவடிக்கை எடுக்காமை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# சிரமதானப் பணி ஊடாக மரக்கன்றுகள் நடுகை

சூழல் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு துணுக்காய், பாண்டியன்குளப் பிரதேசங்களில் பொது நிறுவனங்கள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள் சனசமூக நிலையங்களில் இடம்பெற்ற சிரமதானப் பணிகளின் போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் பலா மரம், மரமுந்திரிகை, மலை வேம்பு போன்ற மரக் கன்றுகள் வழங்கப்பட்டு மேற்படி பகுதிகளில் நாட்டப்பட்டுள்ளன.

இதன்போது யோகபுரம் மகாவித்தியாலயத்திலும், பாண்டின்குளம் மகாவித்தியாலயத்திலும் மாதிரித் தோட்டங்கள் விவசாயத் திணைக்களத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு

(முல்லைத்தீவு)

விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் இரசாயன கிருமிநாசினிகள், வீட்டுத் தோட்டம் நெற்செய்கைக்கான உள்ளீடுகள் என பல உதவிகளை குமுழமுனை கமநல அபிவிருத்தி நிலையத்தினர் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளனர்.

இதில் வீட்டுத்தோட்டம் மேற்கொள்வோருக்கான உள்ளீடுகளுக்கான கடனாக 15 ஆயிரம் ரூபாவும், நெற்செய்கை மேற்கொள்வோருக்காக ரூபா 25 ஆயிரத்திற்கான உள்ளீடுகளும் 06 மாதத்தில் கட்டி முடிப்பதற்கான கடன் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

அத்துடன் இவ்வருடம் இக்கிராமத்தில் 17 பயனாளிகளுக்கு புதிய நெல்லினமான B.G.300 என்ற வெள்ளைக் கொழியன் நெல்லினம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (20)

# கிளிநொச்சி நகரப் பகுதியில் டெங்கு நுளம்புகள் இல்லை

## பூச்சியியல் ஆய்வுக்குழு அறிவிப்பு

கிளிநொச்சி நகரப்பகுதியில் தற்போது டெங்குக்காய்ச்சலை உண்டுபண்ணும் நுளம்புகள் காணப்படவில்லையென கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பூச்சியியல் ஆய்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மலேரியா பிராந்திய வைத்திய அதிகாரியின் முகாமைத்துவத்தில், வன்னி வலயப் பூச்சியியல் ஆய்வாளரின் தலைமைத்துவத்தில் 01.07.2004 வியாழக்கிழமை கிளிநொச்சி நகரில் மேற்கொண்ட டெங்கு நுளம்புக் குடம்பிகளின் ஆய்வு மூலம் டெங்குக்காய்ச்சல் பரவும் வாய்ப்பற்ற நிலைமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் டெங்குக் காய்ச்சலின் தீவிரம் காணப்படும் நிலையில் தற்போதைக் குடெங்கு நுளம்புக் குடம்பிகளின் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பலநோக்கு மண்டபம் திறப்பும் சொத்துக்களைக் கையளித்தலும்

(ஒட்டுசுட்டான்)

வவுனியா மாவட்ட நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட பலநோக்கு மண்டபத்திறப்பு விழாவும் சொத்துக்களை கையளித்தல் நிகழ்வும் நடைபெற்றுள்ளன.

அண்மையில் குளவிசுட்டான் கிராமத்தில் பலநோக்கு மண்டபத்திறப்பு விழா வ/குளவிசுட்டான் அத.க.பாடசாலை ஆசிரியர் க.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. மங்கலவிளக்கினை வவுனியா மாவட்ட அரச அதிபர் ஏற்ற, தேசியக் கொடியினை மாவீரர் புகழ்நிலாவின் தந்தை ச.பாலசிங்கம் ஏற்ற, பலநோக்கு மண்டப நாடாவினை வவுனியா மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் வெட்டித்திறந்து வைத்தார்.

பெயர்ப்பலகையினை வவுனியா மாவட்ட நியாப் திட்டப் பிரதிப் பணிப்பாளர் எந்திரி கே.எஸ். சிவபாதம் திரை நீக்கம் செய்து வைத்தார். கருத்துரைகளை வவுனியா வடக்கு பிரதேச செயலர் ஐயம்பிள்ளை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.கந்தசாமி, வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல், நீர்ப்பாசன பொறியியலாளர்கள் ஆகியோர் வழங்கினர். இதில் துறைசார்ந்த போராளிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

மேலும் மறாஇலுப்பைக் கிராமத்தில் கிராம அபிவிருத்திச் செயலாளர் பரமலிங்கம் தலைமையில் நியாப் திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்ட வீதி, கிணறு என்பன கையளிக்கப்பட்டது. இதில் வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் உட்பட துறைசார்ந்த அதிகாரிகளும், போராளிகளும், அரசசார்பற்ற பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். நெடுங்கேணி பொதுநோக்கு மண்டபத்தில் சொத்துக்களை கையளித்தல் நிகழ்வு பின்னர் நடைபெற்றது. (05)

## இரு கூட்ட அறிவிப்பு

எதிர்வரும் 06 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு கல்விக் குழுக்கூட்டமும், 12.30 மணிக்கு சுகாதாரக் குழுக் கூட்டமும் கிளி/மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற[illegible] என கிளி. மாவட்[illegible] அரச அ[illegible]ர் அறிவித்துள்ளார்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி

வவுனியா தெற்கு வலய முன்பள்ளி ஆசிரியர்களில் இதுவரை பயிற்சி பெறாதவர்களுக்கு பயிற்சி கொடுக்கும் நிகழ்வின் இரண்டாம் கட்டப் பயிற்சிகள் 26,27 ஆம் திகதிகளில் அந்தோனியார் ஆலய முன்பள்ளியில் இடம்பெற்றது.

1ஆம் நாள் நிகழ்வில் கலைமுன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கணேசபாதம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நாள் இசையும், இசை அசைவுகள் மூலமும் மழலைகளை எப்படிக் கற்பிக்கலாம் என்ற செயற்பாட்டை வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலய ஆசிரியைகள் திருமதி கருணாகரன் பேபி யோசப்பின், திருமதி மகாலட்சுமி வேதநாதன் நடாத்தினர். பிள்ளைகளின் கனவு , செயற்பாடு, எதிர்பார்ப்பு, வளர்ச்சியும் விருத்திம் ,மரபும் சூழலும். பிள்ளை யின் எதிர்பாலான நிகழ்வு பிள்ளைகளின் பருவங்கள் போன்ற விளக்கங்களை வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரி ஆசிரியர் சுவர்ணராஜா நடாத்தினார்..

2ஆம் நாள் நிகழ்வு வலய இணைப்பாளர் திருமதி. அருள்வேல்நாயகி தலைமையில் இடம் பெற்றது இங்கு முன்பள்ளி ஆசிரியர்களின் கடமைகள், பொறுப்புக்கள், அவதானம் மூலம் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுத்தல், குழந்தைகளின் சுகாதாரம், சத்துணவு, குழந்தைகளின் விரலின் மூலம் கற்றல் செயற்பாட்டை எப்படி செய்வது போன்ற பல்வேறு செயற்பாடுகள் மூலம் ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

# பிள்ளைநேய அபிவிருத்தி நிலையங்களாக மாற்றம்

முன்பள்ளிகள் பிள்ளைகளினுடைய பூரண விருத்திக்காக செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் தற்போது அதற்கிருக்கின்ற பெயரானது பொருத்தமற்றது என பலரும் சுட்டிக்காட்டியதால் இனி வரும் காலங்களில் முன்பள்ளிகளை பிள்ளைநேய அபிவிருத்தி நிலையங்களாக பெயர் மாற்றி அழைப்பதற்கான செயற்பாடுகள் இடம் பெற்றுக்கொண்டு வருகின்றன.

இதற்கான முடிவு அண்மையில் கொழும்பில் இடம் பெற்ற பிள்ளைநேய அபிவிருத்தி நிலையங்கள் பற்றிய பெற்றோர்களுக்கான விழிப்பூட்டல் பயிற்சி நெறியில் எடுக்கப்பெற்றது.

# சுவாமி விவேகானந்தர்

உலகில் மானிடர்களுக்குச் சேவையாற்றும் மகத்தான பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் சுவாமி விவேகானந்தர் அவர்கள். 1863 ஆம் ஆண்டு ஆனி மாதம் 12ஆம் திகதி பிறந்த விவேகானந்தருடைய இயற்பெயர் நரேந்திரன்.



இறைவன் இருக்கிறாரா? என்று சந்தேகிக்கின்ற தற்கால மக்களின் மனதில் "இறைவன் உண்டு" என்ற சித்தத்தை ஏற்படுத்திய பண்பாளர் விவேகானந்தர். இவர் இளம் வயதிலே மிகவும் துடிப்பு மிக்கவராக விளங்கினார். துறவு மனப்பான்மையும், மன வுறுதியும் கொண்டு விளங்கிய இவருக்கு இராமகிருஷ்ணருடைய தொடர்பு கிடைத்தது. இராமகிருஷ்ணரைக் கண்டவுடன் இவர் கேட்ட கேள்வி " கடவுள் இருக கிறாரா" என்பதுதான். "ஆம் குழந்தாய் "என்ற அவரின் ஒரு சொல்லே இவரை ஆன்மீகத் துறையில் நுழைய வைத்தது. அமெரிக்காவில் "சிக்காகோ" என்ற நகரத்தில் நடைபெற்ற சர்வமத மாநாட்டில் 1893 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11 ஆம் திகதி உரையாற்றியதன் மூலம் இந்து மதத்தின் பெருமையை உலகம் அறியும்படி செய்தார்." கனவான்களே" என்று அழைப்பதை விடுத்து "அன்பான சகோதர, சகோதரிகளே" என்று அழைத்ததனால் அமெரிக்க மக்களும் இவர்பால் ஈர்க்கப்பட்டனர்.

விவேகானந்தர் வெற்றி வீரராக தாய்நாடு திரும்பிய பொழுது விவேகானந்தரை முதல் முதலாக வரவேற்கும் பாக்கியம் இலங்கை மக்களுக்கே கிடைத்தது. 1891 ஆம் ஆண்டு தை மாதம் 15 ஆம் திகதி சுவாமி விவேகானந்தர் தமது சீடர்களுடன் கொழும்புக்கு வந்தார்.

இவர் யாழ்ப்பாணம் சென்ற பொழுது யாழ் இந்துக் கல்லூரியில் "வேதாந்தம்" என்ற தலைப்பிலே சிறந்த சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தி தமிழ் மக்கள் அனைவரையும் தன் வசப்படுத்தினார்.

இவர் 1898 ஆம் ஆண்டு வங்காளத்தில் கங்கைக் கரையில் பேலூர் என்ற இடத்திலே முதலாவது இராமகிருஷ்ண மடத்தை நிறுவினார். அதற்கு உலகெங்கும் 134 கிளைகள் உள்ளன. ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் மடங்கள் அமைக்கப்பட்டு சொற்பொழிவு, வகுப்புக்கள், புத்தகங்கள் வெளியிடுதல் போன்ற பணிகளும் நடைபெறுகின்றன.

சுவாமி விவேகானந்தர் 39 ஆண்டுகள் வாழ்ந்துள்ள போதிலும் அவர் ஆற்றிய பணியோ பல்லாண்டுகள் தொடர்கின்றன. 1902 ஆம் ஆண்டு ஆடி மாதம் 8 ஆம் திகதி அவர் இப்பூவுலக வாழ்க்கையை நீத்தார். எனினும் அவர் தமிழ் மக்கள் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றார்.

# காய்ச்சலின் வகைகள்

மனிதர்களுக்கு அடிக்கடி காய்ச்சல் ஏற்படுவது வழக்கம் தான். அதேபோல ஏனைய உயிரினங்களுக்கும் காய்ச்சல் ஏற்படுகின்றன. அவை என்ன என்று பார்ப்போமா?

1.குதிரைக்கு உண்டாகும் காய்ச்சல் அபிதாமம்.
2.யானைக்கு ஏற்படும் காய்ச்சல் பாகலம்.
3.பசுவிற்கு உண்டாகும் காய்ச்சல் ஈச்வரம்.
4.எருமைக்கு ஏற்படும் காய்ச்சல் ஹாரித்ரம்.
5.ஆட்டுக்கு உண்டாகும் காய்ச்சல் பிரலாபம்.
6.பறவைகளுக்குப் பீடிக்கும் காய்ச்சல் அபிகாதம்.
7.மீன் இனத்திற்கு உண்டாகும் காய்ச்சல் இந்திரமதம்.
8.பாம்புகளுக்கு வரும் காய்ச்சல் அஷிகம்.
9.மனிதருக்கு உண்டாகும் காய்ச்சல் ஜுரம்.

# பென்குயின்

பூமியில் இன்று வாழும் பென்குயின்களுக்கு பறக்க முடியா விட்டாலும் வரலாற்று யுகத்தில் வாழ்ந்த பென்குயின்களுக்கு பறக்க முடியும் என்றும் இவற்றுக்கு 6 அடி வரையிலான உயரமுள்ள சிறகுகள் இருந்ததாகவும் விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

இற்றைவரை எஞ்சியுள்ள 17 இனங்களில் அளவில் பெரிய பென்குயின் கன அடி 3இற்கு மேல் இந்தப் பென்குயின் வகையை எம்பரர் பென்குயின் (Emperor Penguin) என அழைப்பர்.



இங்கு படத்தில் இருக்கும் பென்குயின்களின் இறகுகள் மிகவும் சிறிய கைகள் போன்றே அமைந்துள்ளன. இவற்றைப் பயன்படுத்தி இவற்றிற்குப் பறக்கவும் முடியாது.

அன்று பென்குயின்களுக்கு இருந்த பெரிய இறகுகள் இவ்வாறு சிறியதாகி அவைகளுக்கு பறக்க முடியாமல் போயிருப்பதும் ஏனோ? இது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்ட ஆய்வாளர்கள் இதற்குப் புதுமையான பதிலைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பென்குயின்கள் அதிகமாக வாழ்வது குளிர்பாலைவனமான அண்டாட்டிக்கா பிரதேசங்களிலேயே.

கடும் குளிரினால் மூடப்பட்ட பிரதேசமான அண்டாட்டிக்கா மிருகங்கள், பறவைகள் அதிகளவில் வாழும் பிரதேசம் அல்ல. இதன் காரணமாகவே பென்குயின்களின் வாழ்க்கைக்குள் இடையூறளிக்கக் கூடிய, அவற்றை ஆக்கிரமிக்கக் கூடிய எதிரிகள் அவைகளுக்கு அதிகமாக இருக்கவில்லை.

இதனால் பென்குயின்களுக்கு அவற்றின் இறகுகளைப் பாவிக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. ஏனெனில் யாருக்கும் பயந்து ஓட வேண்டிய அவசியம் இல்லாததால்.

இவ்வாறு நீண்ட காலம் கழிந்த பின் பென்குயின்களுக்கு இறகுகள் தேவையற்ற உறுப்பாக பரிணாமமடைந்தது.

இந்த இறகுகள் இன்றுள்ள நிலைக்கு வந்தது. இதன் காரணமாகவே இன்று பென்குயின்களின் இறகுகள் அதிகமாகப் பாவிக்கப்படுவது பறப்பதற்கு அல்ல, நீந்துவதற்கே.





ஜப்பானின் சொனி நிறுவனம் நீலக்கதிர் காகிதத்தைப் பயன்படுத்தி (டிஸ்க்) V.C.D வெளியிட்டுள்ளது.

இடது புறத்தில் பின்னோக்கியதான இந்த ஒளியியல் தகட்டின் பாவனையாளர் இரண்டு மணித்தியாலயத்திற்கும் அதிகமான விவரணப் படங்களை பதிவு செய்யலாம். ஜப்பானிய நிறுவனம் ஒன்று தரவுப் பாதுகாப்பிற்காக கத்தரிக்கோலினால் வெட்டி அழிக்கும் வண்ணம் இக்காகிதத்தகட்டினை விருத்தி செய்துள்ளது.



ஜப்பானின் ATR ஆய்வு கூடத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ள ரோபோவியர் என்னும் தொலைத் தொடர்பு ரோபோவை தொட்டுப்பார்ப்பதில் மகிழ்வடையும் ஜப்பானியச் சிறுவன். 110 சென்ரி மீற்றர் உயரமுடைய ரோபோவியர் ஒன்பது சிறிய கருவிகளுடன் மக்களிடையே தொடர்பை ஏற்படுத்த வல்லது.






ஜப்பானின் சொனி நிறுவனம் புதிய பாணியிலான டிஜிரல் கமரா ஒன்றை காட்சிக்கு விட்டுள்ளது.

17.3 மில்லிமீற்றர் பருமன் கொண்ட இதன் மெல்லிய உடலில் சிறிய வில்லை (லென்ஸ்) உள்ளது. கம்பனியின் காட்சியறையில் வைக்கப்பட்டுள்ள இக் கமராவின் விலை 58000 யென்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# ஜெலி பிஷ்

"ஜெலிபிஷ்" எனப்படும் இவ்வகை உயிரினம் கடற்கரைகளில் காணப்படுகின்றது. கோறல் தாவரமும் ஜெலிபீஷ்சும், "நிடறியா" இனத்தைச்



சேர்ந்தவையாகும். பார்வைக்கு இது தண்ணீர் நிரப்பப்பட்ட பொலித்தீன் பையைப் போன்று கரைகளில் காணப்பட்டாலும் அவற்றைத் தொடுவது ஆபத்து நிறைந்தது. காரணம் இவைகளைத் தொடுமிடத்து கைகளில் அரிப்பு தோன்றுவதாகவும், அது விஷத்தன்மை உடையதாகவும் இருப்பதேயாகும்.



புவியில் பல்வகைப் புழுக்கள் காணப்படுகின்றன. அவற்றில் பிளத்திகெல் மிந்தஸ், பைலம் அனலிடா, பைலம் எத்ரபோடா என்பவைய்யும் அடங்கும்.

பிளத்திகெல் மிந்தஸ் இனப்புழுக்கள் அரிதாகவும் வடிவத்தில் மிகச் சிறியனவாகவும் காணப்படுகின்றன. அவை மண்புழு, அட்டை போன்று சுருண்டு காணப்படுவதில்லை. இந்த வகைப்புழுக்களே நமது வயிற்றில் உற்பத்தியாகி நமக்குப் பெரும் நோய்களை ஏற்படுத்துகின்றன.

நாம் சாதாரணமாக காணும் மண்புழு, அட்டை என்பவை "பைலம் அனலிடா" இனத்தைச் சேர்ந்தவையாகும்.

"பைலம் மொல்லுஸ்கா" இனத்தைச் சேர்ந்தவை நத்தை, கடலில் வாழும் சிலந்தி என்பவையாகும். இதில் கடற்சிலந்தியின் கண்கள் எமது கண்ணின் வடிவத்தை ஒத்ததாக காணப்படுகின்றது.

நண்டு, இறால் உட்பட பிராணிகளின் தொகுதிகள். அத்ரோபோடா" வகையைச் சார்ந்தவையாகும்.

இவற்றை விட "எக்கினோ" டெமிட்டா இனத்தைச் சேர்ந்த முட்கள் உடைய சிறுபிராணியும் காணப்படும் அவை ஸ்ரார் பிஷ் எனப்படும்.

# வள்ளிபுனம் கனிஷ்ர பாடசாலை;

# சிதைவடைந்த கொட்டகையில் மாணவர்கள்

"வள்ளிபுனம் கனிஷ்ர உயர்தரவித்தியாலயம் எவ்விதவசதியும் இல்லாத நிலையில், மிகுந்த வசதிக்குறைவுடன் இயங்கிவருகிறது. அங்கு மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்ற சூழல் இல்லை. அங்கிருக்கின்ற நிலையில் மாணவர்களால் கல்விகற்கமுடியாதிருக்கிறது. எம்மால் இதனைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாதுள்ளது. இதற்கான சரியான முடிவு கிடைப்பதாகத் தெரியவில்லை.

இந்தப்பாடசாலை மாணவர்களை உயர்வடையச் செய்ய பெரும்பாடுபட வேண்டியுள்ளது. அதனைச்சீர்படுத்த எவரும் நீண்ட காலமாக முன்வரவில்லை. எனவே எமது கிராமத்தில் அமைந்திருக்கும் இந்தப்பாடசாலையின் அவல நிலையை அனைவருக்கும் தெரியப் படுத்தி அதன் தேவைகளை நிறைவு செய்வதற்கு பாடசாலைக்கு ஒரு முறை வந்து அதன் குறைகளை உங்கள் பத்திரிகையில் எழுதுங்கள் என அக்கிராமவாசி ஒருவர் எம்மைக் கேட்டார். அதற்கேற்ப அப்பாட சாலையின் உண்மை நிலையை அறிவதற்காக அந்தப்பாடசாலை நோக்கிப் புறப்பட்டோம்.

நேரம் ஒரு மணியை அண்மித்துக் கொண்டிருந்தது. கரு முகில்கள் கலைந்து சூரியன் தனது சூடான ஒளிக்கதிர்களை வீசிக்கொண்டிருந்தான். நாமும் பாடசாலை வளாகத்தை அண்மித்துவிட்டோம்.

பரந்தன்- புதுக்குடியிருப்பு வீதியில் உடையார்கட்டுச்சந்திக்கு அப்பால் சென்று கொண்டிருக்கையில் வள்ளிபுனம் கிராமத்தில் வீதியோரத்தில் வீதியின் வலப்புறமாக உள்ளது அந்தப்பாடசாலை. வீதியில் நின்றவாறே பாடசாலையை ஒரு முறை உற்றுப் பார்த்தோம்.



அங்கே எமக்கு முதலில் தெரிந்தவை நீண்ட காலமாக வேயப்படாது கூரையில் பெரும் ஓட்டைகள் வீழ்ந்தும் இடைக்கிடையே கிடுகுகள் இல்லாதும் உள்ள கொட்டகைகளும், வீதியை மறைத்து அடைக்கப்பட்டுள்ள வேலியின் அப்பால் சுவர்கள் இடிந்த நிலையில் இருந்து கல்வி கற்கும் மாணவர்களும் தான்,

எமக்கு இந்தப் பாடசாலையின் உண்மை நிலை பார்த்தவுடனேயே புரிந்தது. சிங்கள இனவாத அரசு யுத்தகாலத்தில் தமிழ் மாணவர்களின் கல்வியை பறிப்பதற்காக எறிகணைகளாலும், விமானக்குண்டு வீச்சுக்களாலும் மாணவர்களின் கல்விக் கூடங்களை சிதைத்து கற்குவியலாக்கியது.

இப்போது சமாதானச் சூழல், போர் நிறுத்தப்பட்டுவிட்டது. இந்த நிலையில் தனது குண்டு வீச்சு அராஜகத்தை புரிய முடியாத நிலையில் மாணவர்கள் கல்வி பயில்கின்ற கொட்டகைகளுக்கான திருத்தங்களைப் புரிவதற்கு நிதி வழங்காது விடுவதன் மூலம் முன்னைய குண்டு வீச்சுக்களுக்கொப்பான செயலைச் செய்துவருகிறது என்ற எண்ணம் இந்தபாடசாலையை பார்க்கின்ற போது ஏற்பட்டது.

கூரைகள் வேயப்படாததன் காரணத்தால் மழைநீர் உட்புகுந்து சுவர்கள் இடிந்து வீழ்ந்த நிலையில் உள்ள கட்டடத்தினுள் மாணவர்கள் கல்விகற்பது ஒரு ஆட்டுப் பட்டிக்குள் இருந்து அவர்கள் கல்வி கற்பது போலவே தெரிந்தது.

வெளியில் நின்று பார்த்தபோது மாணவர்களின் அவலமான நிலையை அறிந்து கொள்ள முடிந்தது . எனினும் முழுமையான விபரங்களை அறியும் நோக்குடன் பாடசாலை அதிபரை சந்தித்து உரையாடுவதற்காக பாடசாலை வளாகத்தினுள் சென்றோம்.

இப்போது அதிபரின் அலுவலகம் எங்கே இருக்கும் என்பதை கண்டு பிடிப்பதற்காக சுற்றும் முற்றும் பார்த்தோம். எங்கும் சேதமடைந்த நிலையில் தற்காலிக கொட்டகைகள். ஒரு நிரந்தரக்கட்டடம் மாத்திரம் தெரிந்தது. அதுவாகத்தான் இருக்கவேண்டும் என அங்கு சென்றோம். அதிபரின் அலுவலகத்தினுள் ஆசிரியர் ஒருவர் எதையோ எழுதிக்கொண்டிருந்தார்.

அவரிடம் "மாஸ்ரர் மன்னிக்க வேண்டும்" "நாங்கள் ஈழநாதம் பணிமனையில் இருந்து வந்திருக்கிறோம். பாடசாலையின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. மாணவர்கள் பெரும் சிரமங்களின் மத்தியில் அமர்ந்து கல்வி கற்கின்றனர். இவற்றைப் பற்றி எமது பத்திரிகையில் எழுதப்போகிறோம்" என்றேன்!


உடனடியாக அவர் அதிபரிடம் இரண்டு மாணவர்களை அனுப்பினார். ஒரு சில நிமிடங்களில் அதிபர் வந்து சேர்ந்தார். பாடசாலையின் நிலவரம் பற்றி அறிவதற்காக அதிபருடன் உரையாடலை ஆரம்பித்தோம்.

அதிபருடனான உரையாடலில் முதலில் எதனையும் கேட்கவில்லை. இடிந்த நிலையிலும், கூரைகள் ஓட்டை விழுந்த நிலையிலும் அதனுள் அமர்ந்து கல்வி கற்கும் மாணவர்களின் அவலநிலை பற்றியே எமது உரையாடலை முதலில் ஆரம்பித்தோம். எதற்காக இந்தக்கட்டடங்கள் இப்படி இருக்கின்றன? என அதிபரைக் கேட்டோம்.

மோசமாகப் பழுதடைந்த நிலையில் மூன்று தற்காலிகக் கட்டடங்கள் இருக்கின்றன. அவற்றை வேய்வதற்கான கிடுகுகளைப் பெறுவதற்கு கல்வித்திணைக்களத்திடம் பணம் கேட்டிருந்தோம் .அவர்களிடம் நிதி இல்லை எனக் கூறிக் கைவிரித்து விட்டார்கள். அதன் பயனாக மாணவர்கள் இப்போது மழையில் நனைகிறார்கள் என்றார் கவலையுடன். அப்படியானால் இதனை இறுதியாக எப்போது வேய்ந்தீர்கள்? எனக் கேட்டோம்.

இவை 1998ஆம் ஆண்டு மாணவர் பெருக்கத்தின் காரணமாக அமைக்கப்பட்ட கொட்டகைகள். இன்று ஆறுவருடங்கள் ஆகிவிட்டன. எனினும் ஒருதடவை மாத்திரமே வேயப்பட்டது என்ற திடுக்கிடும் தகவலைக் கூறினார்.

இப்பாடசாலையில் நிக்கொட் திட்டத்தின் ஊடாக இரண்டு கட்டடங்கள் அமைக்கும் வேலைகள் கடந்த 2003ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஆரம்பிக்கப்பட்டன. 2004 தை மாதத்துக் கிடையில் வேலைகள்நிறைவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற ஒப்பந்தத்திலே தான் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனாலும் அதன் வேலைகள் பூர்த்தி செய் யப்படவில்லை.




இன்று அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவும் ஒவ்வொரு பிள்ளையும் பாடசாலை செல்ல வேண்டும் என்பது போன்ற பல்வேறு திட்டங்களைக்கூறி நடைமுறைப்படுத்த ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் போதிய வசதிகள் இல்லாமையால் படும் பாடு.....? பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்குச் சரியான வசதியை ஏற்படுத்தாது பாடசாலைக்கு வராத மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதில் என்ன பயனுள்ளது? என்ற வினா என்னுள் எழுந்தது.

இந்தப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் 65 வீதத்திற்கும் அதிகமானவர்கள் இவ்வாறான சேதமடைந்த கொட்டகைகளில்தான் கல்வி கற்கின்றனர். இங்கும் மனதை வருத்தும் அவலம் என்னவென்றால், இவ்வாறு சேதமடைந்த நிலையில் உள்ள கொட்டகைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மழை பெய்யும்போது அதனுள் இருந்து கல்வி கற்க முடியாது. மழை நேரத்தில் அந்தக் கொட்டகை முழுவதும் மழை நீர் நிரம்பிவிடும். வெளியான பகுதியில் மழை எவ்வாறு பெய்கிறதோ அதுபோல அந்தக் கொட்டகையினுள் மழை பெய்து கொண்டிருக்கும். இதனால், மாணவர்கள் ஏனைய வகுப்பறைகளில் வந்து மழைக்கு ஒதுங்கி நிற்க வேண்டிய நிலை. இவர்கள் மழையின் பாதிப்பற்ற நிலை இருக்கின்ற ஏனைய வகுப்பறைகளில்தான் தஞ்சமடைகின்றனர். இதனால், மற்றைய வகுப்புக்களுக்கும் கற்பித்தற் செயற்பாட்டில் இத்தடங்கல் ஏற்பட்டுவிடும். சிலவேளை மழை பெய்வதற்கான அறிகுறிகள் தென்பட்டால் பெற்றோர் பிள்ளைகளைப் பாடசாலைக்கு விடாது தடுத்துவிடுகின்றார்கள். இந்த நிலையில் மாணவர்கள் கல்வியில் எப்படி நாட்டம் காட்ட முடியும்? என்பது கேள்விக்குறியான ஒன்றுதான்.

அது மட்டுமன்றி இங்கே நிரந்தரக் கட்டடத்தில் கல்வி கற்பவர்களுக்கு தளபாடம் இல்லை. தரையில் அமர்ந்து தான் கல்வி கற்கின்றனர். இந்தப் பாடசாலையில் 960 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களுக்கு கற்பிப்பதற்கு மொத்தம் 40 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், 20 ஆசிரியர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களிலும் நான்கு ஆசிரியர்கள் இம்மாதம் ஆசிரியர் கலாசாலைக்குச் செல்ல இருக்கின்றார்கள். இவர்களும் சென்றால் வெறும் 16 ஆசிரியர்களை வைத்து இந்த மாணவர்களின் எதிர்காலத்தை எவ்வாறு கட்டி எழுப்ப முடியும்? இந்தப் பாடசாலை மாணவர்களுக்கு விஞ்ஞானம், உடற்கல்வி, விவசாயம், மனையியல் மற்றும் அழகியல் பாடங்கள் எதனையும் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் இல்லை. கணித பாடம், விவசாயப் பாடம் என்பனவற்றை கற்பிப்பதற்கு இரண்டு ஆசிரியர்கள் தேவையான இடத்தில் தலா ஒவ்வொரு ஆசிரியர் மாத்திரமே உள்ளனர். அது மட்டுமன்றி கிறிஸ்தவ (ஆர்.சீ) பாடத்திற்கான மாணவர்கள் 100 பேர் உள்ளனர். ஆனால், ஒரு ஆசிரியர் கூட இல்லாத நிலை காணப் படுகிறது.

விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்துக்கு இப்பாடசாலையில் எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றுதான் கூறவேண்டும். ஏனெனில், உடற்கல்வி ஆசிரியர்கள் எவருமே இல்லாத நிலையில் மாணவர் மத்தியில் விளையாட்டுத் தொடர்பான ஊக்கம் இல்லாதிருக்கின்றது. பாடசாலை மைதானம் குன்றும் குழியுமாகவே காட்சி தருகிறது. இது பற்றி பாடசாலை அதிபரிடம் கேட்டபோது "தமக்கு இதனை மட்டப்படுத்துவதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. அதனால், மைதானம் அப்படியே குன்றும் குழியுமாக இருக் கின்றது" என்றார்.

இம்முறை நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரத்தில் மாணவர்கள் சித்தி பெற்ற விகிதம் எவ்வாறு உள்ளது? எனக் கேட்ட போது, "அதனை நான் சொல்வதைவிட சொல்லாமல் விடுவதே நல்லது என்றால் போல் தயங்கிவிட்டு "பத்து வீதம் தான் சித்தி" என்றார். இதற்கான கர்ரணம் என்னவாக இருக்கும் எனக் கேட்டபோது "மாணவர்கள் சொந்த இடங்களுக்குச் சென்றமை மற்றும் போதிய ஆசிரியர்கள் இல்லாமை என்றார்.

**அ. லோகீசன்**

---

# இ.நிர்வாகம் பற்றி மட்டும் பேச ஐ.ம.சு.மு.க்கு அதிகாரமில்லையென்கின்றார் டில்வின் சில்வா

விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்களில் இறுதித் தீர்வு பற்றி பேசாமல் இடைக்கால சபை பற்றி மட்டும் பேச ஐ.ம.சு.முன்னணிக்கு அதிகாரம் கிடையாது என ஜே.வி.பி.யின் செயலாளர் டில்வின் சில்வா லங்காதீப நாளிதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு நடைபெறுமாயின் ஜே.வி.பி. இவ் விடயத்தில் தலையிடும் எனவும் அவ்வாறான எண்ணம் எதுவும் ஐ.ம.சு. முன்னணிக்கு கிடையாது எனவும் தெரிவித்துள்ளார். கூட்டணி இறுதித் தீர்வு பற்றிப் பேசவே இணங்கியிருப்பதாகக் கூறிய சில்வா அதன்போது இடைக்கால சபை பற்றியும் பேசப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# கடவத்த தீவிபத்தில் 10 மில். ரூபா நட்டம்

(கொழும்பு)

சிறிலங்காவின் கடவத்தப் பகுதியில் ஏற்பட்ட தீவிபத்தில் பத்து மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான பொருட்கள் எரிந்து அழிந்துள்ளன. சென்ற புதன் காலை கடவத்த பகுதியில் இரும்புக் கடைத் தொகுதியொன்றில் தீவிபத்து ஏற்பட்டதாகவும், தகவல் அறிந்து தீயணைப்புப் படையினரும், பொலிசாரும் அவ்விடத்திற்குச் சென்று சேருமுன்னரே கடைத்தொகுதி முற்றாக எரிந்து மேற்படி சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 30ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆகஸ்ட் முதல் நியமனம்

(கொழும்பு)

வேலையற்ற 30ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆகஸ்ட் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் நியமனங்கள் வழங்கப்போவதாக நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்த நியமனங்களில் எவ்வித மாற்றங்களும் செய்யப்பட மாட்டாதெனவும், மாவட்ட ரீதியாக பட்டதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் எனவும் நிதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விண்ணப்பம் கோரல்

நிதித்துறை வழங்கற்பகுதியால் தொடங்கப்படவுள்ள தையல் பயிற்சி நெறிக்குப் பொருத்தமான ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன. பயிற்சி நெறியில் தேர்ச்சியடைவோர் தகுந்த சம்பளத்துடன் பணிக்கு அமர்த்தப்படுவர், பயிற்சி செலவுகள் யாவும் (உணவு உட்பட) வழங்கற்பகுதியால் பொறுப்பேற்கப்படும்.

குறிப்பு:- தையல் அனுபவம் உடைய இருபாலாரும் சம்பளத்துடன் பணிக்கமர்த்தப்படுவர்.

வேண்டுகை முடிவுநாள்:- 20.07.2004

வேண்டுகைகள் அனுப்பவேண்டிய முகவரி:-

அந்திவானம் பதிப்பகம்
கிளிநொச்சி.
அந்திவானம் பதிப்பகம்,
புதுக்குடியிருப்பு.

ஆளுகை,
வழங்கற்பகுதி,
நிதித்துறை.

(4758)

## பதவி வெற்றிடம்

வவுனியா வடக்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில்கீழ்க்குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. விண்ணப்பிக்க விரும்பும தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் தலைவர், வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி என்ற முகவரிக்கு 15.07.2004 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அன்றேல் பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

01.கிளைமுகாமையாளர்:- 165/88 - 13 31/99இன்படி

சம்பளம்: $\frac{5250.00-75.00X10-80.00X10}{63000.00-900.00X10-960.00X10}$ = 81600/=

வயதெல்லை:- 18-45 வரை

கல்வித்தகைமை:-க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில்

1. தமிழ்பாஷை, கணிதம்1/கணிதம்2/வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகிய இரு பாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. தமிழ், கணிதம்/வர்த்தகமும்கணக்கியலும் க.பொ.த. உயர்தரத்தில்சித்திபெற்றிருப்பின் க.பொ.த. சாதாரணதரத்தில் தமிழ், கணிதம்1/கணிதம்2/ வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகிய இவற்றில் ஒன்றில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக்கப்படும்.

02. வாகனக்காப்பாளர்:- 314 /16 31 /99இன்படி

சம்பளம்:- $\frac{4500.00-60.00X10-65.00X10}{54000.00-720X10-780.00X10}$ = 69000/=

வயதெல்லை:- 18-45

கல்வித்தகைமை:-5ஆம் ஆண்டுக் கல்வித்தகைமையுடன் நல்ல தேகாரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

தலைவர்,
வ.வ.ப.நோ.கூ.சங்கம்,
நெடுங்கேணி.

(சி-9877)


## குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபத்தினரின்

## மாபெரும் பரிசுத்திட்டம் அறிமுகம்



இன்றுமுதல் ஆரம்பம்

வாடிக்கையாளர் அட்டை மூலம்
பல பரிசுகளை வெல்லும் அரியவாய்ப்பு!

உடன் விரையுங்கள்!
இன்றே இணையுங்கள்!

- இவ் அட்டை மூலம் 10000/= பெறுமதியான பொருள் கொள்வனவு செய்தவுடன் அப்பெறுமதியின் 5% கழிவை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
- குலுக்கல் பரிசாக 10000/= ரூபாய் கொள்வனவு நிறைவு செய்யப்பட்ட அட்டையின் இலக்கங்கள் நான்கு மாதத்திற்கு ஒரு தடவை குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு முதலாவது பரிசாக ஒரு பவுண் தங்க நாணயம் வழங்கப்படும்.
- ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.
- இவ் அட்டை பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடகாலத்திற்கு செல்லுபடியாகும்.
- இவ்வட்டை ஒரு வருடம் பூர்த்தியாகும் வரைக்கும் குலுக்கல் எண்ணுடன் சேர்க்கப்படும்.
- பரிசில் வழங்கப்பட்ட எண் அட்டை மீண்டும் குலுக்கல் எண்களுள் சேர்க்கப்படமாட்டாது.
- இவ் வாடிக்கையாளர் அட்டை 03-07-2004இல் இருந்து 30-09-2004 வரைக்கும் வழங்கப்படும்.
- இவ் அட்டை மொத்தவியாபாரத்திற்கு வழங்கப்படமாட்டாது.





வாடிக்கையாளர் அட்டையின் மாதிரி வடிவம்

வணிக நிறுவனங்கள் எதிலும் இல்லாத
இவ் அரிய வாய்ப்பை தவற விடாதீர்கள்!

## குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-9945)

# சமாதான முயற்சிகளுக்கு இராணுவம் முழுமையான பங்களிப்பைச் செய்யும்

## - புதிய இராணுவத் தளபதி கூறுகின்றார்

(கொழும்பு)

நாட்டின் சமாதான முயற்சிகளுக்கு முழுமையான பங்களிப்பை அர்ப்பணிப்போடு தாம் செய்யவிருப்பதாக புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்தகொட்டேகொட தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 17ஆவது இராணுவத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் சாந்தகொட்டே கொடே நேற்றுமுன்தினம் பதவியேற்றதையடுத்து இராணுவத் தலைமை அலுவலகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இராணுவத்தினருக்கு விசேட பணித்திறன் பயிற்சிகளும் நவீன தொழில்நுட்ப அறிவூட்டல்களும் வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

தற்போது இடம்பெறும் சமாதான முயற்சிகளுக்கான அடித்தளத்தை இட்டவர்கள் இராணுவத்தினரும், பொலிசாருமே என புதிய இராணுவத்தளபதி சுட்டிக்காட்டியுள்ளதுடன் இராணுவத்தினருடைய கடமை யுத்தம் புரிவது மட்டுமல்ல நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உழைப்பதுமாகும் என்றார்.

# சிறுபான்மைக் கட்சிகளை அழிக்க முயற்சி

## - மு.கா. தலைவர் கருத்து

(கொழும்பு)

அரசாங்கம் சிறுபான்மைக் கட்சிகளை அழிக்கும் நடவடிக்கைளை முன் கொண்டு செல்வதன் மூலம் அது எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். அனுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரம் ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய அவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பலமிழக்க செய்ய அரசாங்கம்முனைந்ததைப் போன்றே, கருணாவைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை வலுவிழக்கச் செய்யும் முயற்சிகளில ஈடுபட்டது. இதுவே இன்று சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாத கட்டத்திற்கு இலங்கையை கொண்டு சென்றுள்ளது.

எனவே அரசாங்கம் சிறுபான்மைக் கட்சிகளை பலமிழக்கச் செய்து அதன் மூலம் தமது அரசியல் நலனைப் பேண முற்படுமானால் அது அரசாங்கத்திற்கே பாதகமாக அமையப்போகிறது. இதேவேளை நிறைவேற்று சனாதிபதி முறையை ஒழிக்கும் திட்டத்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த்து வருகிறது. அந்தக் கட்சியை பொறுத்தவரையில் நிறைவேற்று சனாதிபதி முறையில் சில மாற்றங்களைக் கொண்டு வர விரும்புகிறது. சனாதிபதியானவர் பாராளுமன்றம் மற்றும் நீதிமன்றத்துக்குப் பதில் சொல்ல வேண்டியவராக இருக்கும் வகையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமானால் அதனை முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்கும் என தெரிவித்தார்.

## சாவு அறிவித்தல்

### திருமதி. இராசையா கனகமணி

முள்ளியவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது உக்குளாங்குளம் வவுனியாவில் வசித்து வந்தவருமான திருமதி. இராசையா கனகமணி அவர்கள் 29.06.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார், திரு. கி.இராசையா அவர்களின் அன்பு மனைவியும், சிவலிங்கம் (இந்தியா), காலஞ்சென்ற கனகசபாபதி (சங்கீத ஆசிரியர்), கிருஷ்ணபிள்ளை (அமிர்தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி), சுந்தரலிங்கம் (சுவிஸ்), உதயகுமாரி (சுவிஸ்), விக்கினேஸ்வரன் (இந்தியா), இராசகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் , ஜெகதாம்பாள் (இந்தியா), மல்லிகாதேவி (ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி), ஜெயராணி (சுவிஸ்),கணேசலிங்கம் (சுவிஸ்), தியாகராசா (பொறியியலாளர், கனடா), மாலா, நிஷாந்தினி (மன்னார்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற அன்னப்பிள்ளை (முள்ளியவளை), சந்திரா (இளைப்பாறிய ஆசிரியர், முள்ளியவளை), செல்லம்மா, மகேஸ்வரி (வ.வ.ப.நோ.கூ.சங்க முன்னாள் பணியாளர்கள், நெடுங்கேணி) ஆகியோரின் அன்புச்சகோதரியும், இராசம்மா, கணபதிப்பிள்ளை, அம்பலவாணர் (முள்ளியவளை), காலஞ்சென்ற நடராசா, முத்துக்குமாரு (நெடுங்கேணி) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 04.07.2004 ஞாயிறு காலை 10 மணிக்கு 63/01, கூமாங்குளம் வீதி, உக்குளாங்குளம், வவுனியாவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தச்சனாங்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(சி/9876)

## ஓராண்டு நினைவஞ்சலி

(2004.07.03)

| பூவுலகில் | | விண்ணுலகில் |
|---|---|---|
| 1947 * 07 * 20 |  | 2003 * 06 * 15 |

### திருமதி. சிவசுப்பிரமணியம் அன்னபூரணி

(அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை)

ஆரத்தழுவி அன்புமொழி கூறி
சீராக எமைத் தழுவிச் சிந்தை மகிழ வைத்து
பாரினிலே எம்மைப் பண்புடனே வாழவைத்து
நேயமுடன் என்றும் எம் நினைவில் நிலைத்திருக்கும்
பாசமிகு அம்மாவே-உங்களை
பிரிந்து ஆண்டொன்று மறைந்திடினும் உங்கள்
நினைவலைகள் என்றென்றும் மறைந்திடாது.

உங்கள் நினைவுகளுடன்
மக்கள்,மருமக்கள்,சகோதரர்,
பேரப்பிள்ளைகள்.

தகவல:-மகன்
சி. ராஜேஸ்கண்ணா
மாணிக்கப்பிள்ளையார் நகைப்பூங்கா, மல்லாவி.

(4762)

## வீரவணக்கம்

03 - 07 - 2004


|  |  |
|---|---|
| மேஜர் புலிக்குட்டி (ஹரி) | கப்டன் கலைக்குயில் (அருள்). |
| தாயின் மடியில்:-04-03-1970 | தாயின் மடியில்:- 01-11-1980 |
| தாயக மண்ணில்:- 19-07-1996 | தாயக மண்ணில்:- 04-07-2000 |

மானமொன்றே வாழ்வென்றீர்
மண்ணிற்காய் மரணித்தீர்,
உருவாகும் தமிழீழம்,
அது கூறும் உம் நாமம்

தகவல்:-
ஞா.வவி

(4624)

## துயர் பகிர்கின்றோம்

| அன்னை மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 29 04 1974 |  | 29 06 2004 |

### அமரர் சச்சிதானந்தசிவம் ஞானசீலன்

(B.COM) அவர்கள்

பழகியது சில காலம் என்றாலும் எமதுளத்தில்
பலமாகப் பதிந்திட்ட பண்பான சீலா-நீ

உறவோடு ஊர் பார்க்கச் சென்ற வேளை
உத்தமனே உனை இழந்த செய்தி கேட்டு
உளம் தாங்கா வேதனையில் உழல்கின்றோம்
உன் இனிய முகம் காணத் துடிக்கின்றோம்.

கணப்பொழுதில் உனைப் பிரிந்த உன் உறவின்
பெருந்துயரந் தீரவழி தேடுகின்றோம்
உலக உணவுத்திட்டத்தில் உன்சேவை நிலைத்து நிற்கும்
உன் ஆத்மா சாந்திக்காக வேண்டும்.

அரசாங்க அதிபர்,
மாவட்ட திட்டமிடல் செயலக
அலுவலர்கள்,
மாவட்ட செயலகம், கிளிநொச்சி

(சி.9747)

## யூரோ-2004 கால்பந்து போட்டி

# செக்.குடியரசின் கனவு கலைந்தது வரலாறு படைத்தது கிரேக்கம்

# இறுதிப் போட்டியில் விளையாட போர்த்துக்கல் -கிரேக்க அணிகள்

யூரோ -2004 கால்பந்து இறுதிப்போட்டியில் போர்த்துக்கல் அணியை எதிர்கொள்ள கிரேக்கம் (கிரீஸ்) அணி அணிதகுதி பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் பலம் வாய்ந்த செக்குடியரசு அணியை 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து கிரேக்க அணி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான அரையிறுதிப் போட்டி போர்த்துக்கல்லின் போட்டோ நகரில் நடைபெற்றது. போட்டியின் முதல் 90நிமிடங்களில் இரு அணிகளும் கோல் எதனையும் பெறவில்லை. இதனை அடுத்து மேலதிக நேரம் வழங்கப் பட்டது.

மேலதிக நேரத்தின் இறுதி நிமிடத்தில் றயானோ பெனாட்டினின் அபாரமான கோல் மூலம் கிரேக்க அணி எதிர்பாராத வெற்றியை ஈட்டி செக்.அணியை அதிர்ச்சியில் உறைய வைத்தது.

இதற்கு முன்னர் உலகக்கிண்ணப் போட்டிகளிலோ, யூரோ கிண்ணப் போட்டிகளிலோ ஒரு போட்டியைத் தானும் வெற்றி பெற்றிருக்காத கிரேக்க அணிஇம்முறை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை அந்நாட்டு ரசிகர்களை மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மேற்படி தோல்வியினால் போட்டித் தொடரில் ஒரு போட்டியில் தானும் தோல்வியடையாது அரையிறுதி வரை முன்னேறி யூரோக்கிண்ணத்தைக் கைப்பற்றும் கனவைச் சுமந்து வந்த செக்குடியரசு அணி சோகத்துடன் வெளியேறக்கர்ரணமாக அமைந்து விட்டது.

இதேவேளை யூரோக் கிண்ண ஆரம்ப லீக் போட்டியில் கலந்துகொண்ட இரு அணிகளுமே இறுதிப்போட்டியிலும் மோதவுள்ளமையானது இப்போட்டியின் சிறப்பம் சமாகும்.

இதேவேளை நேற்று முன்தினம் அதிகாலை நடைபெற்ற பரபரப்பு மிகுந்த முதல் அரையிறுதி ஆட்டத்தில் போட்டியை நடத்தும் போர்த்துக்கல் மற்றும் நெதர்லாந்து அணிகள் மோதின. எந்தவித பதட்டமும் இன்றி ஆட்டத்தைத் தொடங்கிய போர்த்துக்கல் அணி தொடக்கம் முதல் நெதர்லாந்து அணிக்கு நெருக்கடி கொடுத்தது. நெதர்லாந்து வீரர்களின் ஆட்டம் மோதலில் கொஞ்சமும் எடுபடவில்லை. நம்பிக்கை வீரர் நிஸ்டல்ரூய் மட்டும் கொஞ்சம் தாக்குப்பிடித்து ஆடினார். கால்இறுதிப்



போட்டியில் ஆடாத போர்த்துக்கல் அணித்தலைவர் லூயிஸ்பிகோ மோதலில் உச்சக்கட்ட நம்பிக்கையுடன் தனது ஆட்டத்தைத் தொடங்கினார். இவரின் தலைமையில் போர்த்துக்கல் வீரர்கள் சிறப்பான தாக்குதலை நடத்தினர். ஆட்டத்தின் 26-ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டி



யானோ ரொனால்டோ தலையால் முட்டி ஒருகோல் போட்டார். இத னால் போர்த்துக்கல் 1-0 என்ற கோல்க்கணக்கில் முன்னணி பெற்றது. தொடர்ந்து ஆட்டத்தின் 2ஆவது பாதியில் யாரும் எதிர்பாராத வகையில் போர்த்துக்கல் வீரர் மேனிச் ஒருகோல் அடித்தார். இந்தக் கோலை நெதர்லாந்து வீரர்கள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இதனையடுத்து போர்த் துக்கல் அணி 2-1 என்ற கோல் கணக்கில் முன்னணி பெற்றது. பரபரப்புடன் நடந்த ஆட்டத்தின் நடுவே போர்த்துக்கல் வீரர் ஜோர்ஜ் ஆன்டிராட்ஸ் எதிர் அணிக்காக கோல்போட்டுவிட்டார். இதனால் போர்த்துக்கல் ரசிகர்கள் லேசான அதிர்ச்சி அடைந்தனர்.ஆனால் இந்த வாய்ப்பை

கூட நெதர்லாந்து வீரர்களால் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. முடிவில் போர்த்துக்கல் அணி 2-1என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஐரோப்பிய சாம்பியன் கால்பந்து வரலாற்றில் போட்டியை நடத்தும் நாடு 20ஆண்டுக்குப் பின்னர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. முன்னதாக 1984ஆம் ஆண்டு போட்டியை நடத்திய பிரான்ஸ் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியதோடு சாம்பியன் கோப்பையையும் வென்றது. முதல்முறையாக இறுதி வாய்ப்பை எட்டி உள்ள போர்த்துக்கல் அணி, முன்னதாக 84மற்றும் 2000 ஆவது ஆண்டுகளில் அரையிறுதியில் தோல்வி கண்டது. 66ஆம் ஆண்டு உலகக் கோப்பை



கால் இறுதிக்கும், போர்த்துக்கல் அணி முன்னேறியுள்ளது குறிப்பிடத்தக்கது. வெற்றிக்குப் பின்னர் போர்த்துக்கல் அணித்தலைவர் பிகோ கூறுகையில், எனக்கு ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியை ஒரு வார்த்தையால் கூற முடியாது . இறுதிப் போட்டியில் சாதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. போர்த் துக்கல் வீரர்கள் இறுதி மோதலை ஆவலு டன் எதிர்நோக்கி இருக்கிறார்கள் என்றார். இறுதி ஆட்டம் பற்றி பயிற்சியாளர் பிலிப் ஸ்காலரி கூறுகையில், உலக கோப்பை இறு திப் போட்டியை விட ஐரோப்பிய சாம்பி யன் இறுதி ஆட்டம் அதிக பதட்டத்தை உண்டாக்கி இருக்கிறது என்றார்.



# சிறிலங்கா- அவுஸ். முதலாவது டெஸ்ட் போட்டி; சிறிலங்கா வெற்றி பெற 312 ஓட்ட இலக்கு

சுற்றுலா சிறிலங்கா அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் சிறிலங்கா அணி வெற்றி பெற 312 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் உள்ளது.அவுஸ்திரேலிய அணி முதல் இனிங்சில் பெற்ற 207 ஓட்டங்களுக்கு பதிலெடுத்து ஆடிய சிறிலங்கா அணி அதன் முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் துடுப்பாட்டத்தில் டில்சான் ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களைப் பெற்றார்.



அதனை அடுத்து 110 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த அவுஸ். அணி ஆரம்பம் முதலே சிறிலங்காப் பந்து வீச்சாளர்களிடம் இருந்து கடும் சவாலை எதிர்கொண்டது. அவுஸ். அணியின் முதல் மூன்று விக்கெட்டுக்களும் 14 ஓடங்களுக்கு வீழ்த்தப்பட்ட நிலையில் டரன் லீமனும் அடம் கில்கிறிஸ்டும் இணைந்து ஓட்ட எண்ணிக்கையினை அதிகரித்தனர். கில்கிறிஸ்ட் 80 ஓட்டங்களையும், லீமன் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதன் படி அவுஸ். அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 201 ஓட்டங்களை பெற்றது.பந்து வீச்சில் லலித்மான்சிங்க 42 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் சமிந்தவாஸ், சொய்சா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

முதல் நாளில் மூன்று விக்கெட் இழப்பிற்கு 43 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சிறிலங்கா அணி தனது முதல் இனிங்சை நேற்று தொடர்ந்து மொத்த ஓட்ட எண்ணிக்கை 47 ஆக இருக்கும் போது 14 ஓட்டங்களுடன் மஹேலஜெயவர்த்தனவை இழந்தது. இதனை அடுத்து திலான் சமரவீர ஒரு ஓட்டத்துடன் மெக்ராத்தின் பந்து வீச்சில் ஆட்டமிழந்த போது சிறிலங்கா அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதனைத் தொடர்ந்து நுவான்சொய்சா 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ரசல் ஆனல்ட் 6 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் கடைசியாக வீழ்ந்த மூன்று விக்கெட்டுக்களையும் ஷேன்வோர்ன் கைப்பற்றினார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது இனிங்சில் சமிந்தவாஸ் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# மேற்கிந்தியத்தீவுகள் அணியை வீழ்த்திய இங்கிலாந்துக்கு 7 விக்கெட்டால் வெற்றி

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் முக்கோண ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியதீவு அணியை 7 விக்கெட்டுக்களால் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவு 159 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் 46 ஓட்டங்களை சர்வான் பெற்றார். பந்து வீச்சில் ஹார்மிசன் 3 விக்கெட்டுக்களையும், அண்டர்சன் 3 விககெட்டுக்களையும் கைப்பற்றினர்.இங்கிலாந்து அணி22 ஓவரில் 3விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கையடைந்தது.துடுப்பாட்டத்தில் ரெஸ்கொதிக் 55 ஓட்டங்களைப் பெற்றார்.

## -விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ்

# மகளிர் ஒன்றையர் இறுதிப்போட்டியில் விளையாட செரீனா,சரகோவா தகுதி

விம்பிள்டன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் இறுதிப்போட்டியில் விளையாட அமெரிக்காவின் செரீனா வில்லியம்சும் ரஷ்யாவின் மரியா சரகோவாவும் தகுதி பெற்றுள்ளனர்.




லண்டனில் நடைபெற்றுவரும் இப் போட்டியில் முதல் அரையிறுதிப் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் பிரெஞ் வீராங்கனை மௌரிஸ் போலை தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு அரையிறுதியில் ரஷ்யாவின் மரியா சரகோவா முன்னாள் சம்பியனும் அமெரிக்க வீராங்கனையுமான லின்சேடெவன் போட்டை தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார். இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

# தமிழீழ விளையாட்டுத் துறை நடாத்தும் இளையோர் விளையாட்டு விழா இன்று


தமிழீழ விளையாட்டுத்துறை நடாத்தும் 2004ஆம் வருடத்துக்கான இளையோர் விளையாட்டு விழா இன்று (03.07.2004) யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றது. இரண்டு தினங்கள் இப்போட்டிகள் நடைபெறும். இதில் கலந்து கொள்வதற்காக வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து 08 மாவட்டங்களையும் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர். 14,16.18 வயதுப் பிரிவுகளில் ஆண்களுக்கு தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவும் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன. ஒவ்வொரு போட்டிக்கும் மாவட்டத்தில் இருந்து தலா 3 போட்டியாளர்கள் பங்கு பற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். போட்டிக்கான ஏற்பாடுகளை தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா தலைமையிலான குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

# கிளி.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மெய்வன்மைப்போட்டி இன்று

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயல்கங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இப்போட்டிகளின் இறுதி நாளான நாளை மாலை 3 மணியளவில் கரைச்சிப் பிரதேச செயலக கால்பந்தாட்ட அணிக்கும் பூநகரி பிரதேச செயலக கால்பந்தாட்ட அணிக்கும் இடையிலான கால்பந்து இறுதிப்போட்டி நடைபெறவுள்ளதாக கிளி.மாவட்ட விளையாட்டு அலுவலர் கனகராசா தெரிவித்தார்.

## சிந்தனைக்கு



பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம்வாய்ந்த ஆயுதமாகவே, கரும்புலிகளை நான்உருவாக்கியுள்ளேன்.

தமிழீழத்தேசியத்தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 03-07-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com


## கடினமான பாதை!

விடுதலைப்புலிகளுக்கும் – சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான முன்னெடுப்புக்கள் மிகவும் கடினமானது. ஆயினும் அந்தப் பணியை நோர்வே முன்னெடுக்கும் என்ற நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்மின் கூற்றுக்கள், அவர் இச்சமாதானப் பாதையின் கடுமைகளைப் புரிந்துகொண்டுள்ளதோடு, தமது அரசின் விடாமுயற்சிகளையும் வெளிக்காட்டியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முன்னெடுப்புக்கள் மிகக் கடுமையானதாக இருக்கும் என்பது எரிக் சூல் ஹெய்மின் இலங்கை தொடர்பான அனுபவங்களே – குறிப்பாக, சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளே உணர்த்தப் போதுமானதாகும்.

எரிக்சூல் ஹெய்மின் இத்தகைய கூற்றுக்களுக்கு சமாதான முயற்சிகளில் மூன்றாண்டுகளுக்கு மேலான அவரது அனுபவம் காரணமாக இருக்கலாம். குறிப்பாக, தற் போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தின் இரட்டைத் தனமான போக்கு சமாதான முயற்சிகளைக் கடினமாக்குவதாக அவர் கருதவாய்ப்புண்டு.

சிறிலங்கா இராணுவத் தரப்பு கருணாவிற்கு உதவியதாக எழுந்துள்ள குற்றச்சாட்டே தற்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தைகள் தாமதமடைவதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே இடை நிறுத்தப்பட்டிருந்தன என்பது வேறு விடயம்.

சரி தற்பொழுது பேச்சுவார்த்தை இடை நிறுத்தப்பட்டமைக்குக் காரணம் கருணா விவகாரமாகவே இருக்கட்டும். ஆனால், கருணா விவகாரத்தில் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு / குற்றச்சாட்டு எந்தவகையில் தவறானதாகிவிடும்?

அதாவது, அரசாங்கம் இவ்விவகாரத்தில் யதார்த்தத்தைத்தானும் பேச முன்வருதல் வேண்டும். ஆனால், அரசாங்கமோ யதார்த்தத்திற்கு மாறாகவும், பொறுப்பற்ற தனமாகவும் பேசுவதாகவே உள்ளது.

எடுத்துக்காட்டாகக் கொழும்பிற்குள் கருணா வந்துள்ளதையும், அவரின் பாதுகாப்பிற்கு இராணுவம் உதவுவதாகவும் வெளியாகும் தகவல்களை இராணுவமும், அரச தரப்பும் மறுப்பதாக இருக்கலாம். ஆனால், கருணா கொழும்பிற்குள் பிரவேசித்ததைத் தொடர்ந்தும் இராணுவம் மறுப்பதென்பது யதார்த்தத்திற்குப் பொருத்தப்பாடானதாக இருக்க மாட்டாது.

ஏனெனில், கருணா கொழும்பிற்குள் பிரவேசித்தது தெரியாதுபோனாலும், தற்பொழுது கருணா எங்கிருக்கின்றார் என்பதும் தெரியாததுபோன்று பேசுவது சிறுபிள்ளைத்தனமானதாகும். அதாவது, கருணாவைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது போன்று பேசுவது அரச தரப்பு இவ்விவகாரத்தைத் தமக்குச் சாதகமாக்கி மூடிமறைத்துவிட முற்பட்டு நிற்பதன் வெளிப்பாடே.

அவ்வாறு இல்லாதுவிட்டால், நாட்டின் பாதுகாப்பு என்ற ரீதியில் அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றல்லவா அர்த்தப்படும்? அதாவது, கருணாவின் நடவடிக்கையை அரசு அறியாமல் இருப்பது என்பது நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லையா?

ஆகையினால், கருணா விவகாரத்தில் அரசாங்கம் திட்மிட்ட ரீதியிலேயே செயலாற்றி வருகின்றது. இது யதார்த்தத்திற்கு மாறானதாக இருப்பதினால்தான் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் கேள்விக்குள்ளாகியுள்ளன. அடுத்த கட்டப் பேச்சுக்கள் இடம்பெறுமா? என்பது குறித்த கேள்வியும் தவிர்க்க முடியாததாகிறது.

இதேவேளை, எரிக் சூல்ஹெய்ம், இனப்பிரச்சினைக்குத் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்பதும் நிராகரிக்க முடியாததொன்றாகும். அவ்வாறு இல்லாதுவிட்டால், சிறிலங்கா ஆட்சியாளர்களினால் அவரின் தனிப்பட்ட கௌரவம் கூடப் பாதிக்கப்படும் நிலையில், அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

ஆனால், எரிக் சூல்ஹெய்மும், நோர்வே அரசும் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டாலும் அதில் வெற்றிபெறுவார்கள் என எதிர்பார்ப்பதற்கில்லை. ஏனெனில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசாங்கம் முழு அளவிலான ஈடுபாட்டை உளப்பூர்வமாகக் காட்டியதில்லை. ஆகையினால், சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்கள் மிகவும் கடினமானதும், தீவிர முயற்சி மேற்கொள்ளப்படுபவையாகவும் இருப்பினும்கூட, முன்னேற்றம் காண்பதென்பது கடினமானதாகவே இருக்கும்.

# புளத் சிங்கள தொழிலாளர் மீதானதாக்குதல் சந்தேகநபர் மூவர் அடையாளம் காணப்பட்டனர்

(கொழும்பு)

மத்துகம-புளத்சிங்களவில் தோட்டத்தொழிலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்பட்ட ஏழு சந்தேகநபர்களிடையேயும் மூன்று நபர்கள் சாட்சியினால் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

சுமார் 500 பேர் கொண்ட கலகக்கும்பல் ஒன்றினால் புளத்சிங்கள தோட்டத்தில் தாக்குதல் நடத்தப்பட்ட போது 186 வீடுகள் சேதமாக்கப்பட்டதோடு பன்னிரெண்டு தோட்ட ஊழியர் காயமடைந்திருந்தனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் களுத்துறை மாவட்ட அமைப்பாளர் பொன்.இராமலிங்கம் உட்பட தாக்குதலில் காயமடைந்த தொழிலாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த வைத்தியசாலைக்கும் மேற்படி கலகக் கும்பல் சென்று வைத்தியர்களை அச்சுறுத்தியது.

அத்துடன் பொலிஸ் அதிகாரிகளாலும் தொழிலாளர்கள் தாக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இது தொடர்பான வழக்கை ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதிக்கு மத்துகமநீதிமன்ற நீதியாளர் தவராசா ஒத்தி வைத்துள்ளார்.

# எந்தத் தொழிலும் செய்யவில்லையென பட்டதாரிகளிடம் உறுதிமொழி கோருவது தவறு

### ஐ.தே.க.பா.உ.. அகிலகாரியவசம்

(கொழும்பு)

வேலைவாய்ப்புக் கோருகின்ற பட்டதாரிகளிடம் இதுவரை தாம் தொழில் எதனையும் செய்யவில்லை என்ற உறுதிமொழியைக் கோருவது அடிப்படை மனிதவுரிமை மீறல் என ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அகிலகாரியவசம் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது தொடர்பாக அரசு பின்பற்றி வருகின்ற நடவடிக்கைகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கின்ற வேளை அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

வேலை வாய்ப்பற்ற பட்டதாரி ஒருவர் தனக்குரிய வேலை வாய்ப்பு ஒன்று கிட்டும் வரை சிறியவேலையொன்றைத் தேடிக் கொள்வது தவறா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

முப்பதினாயிரம் வேலையற்றபட்டதாரிகள் இருப்பதாகக் கணிப்பிட்ட சந்திரிகா அரசாங்கம் இப்பொழுது 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட பட்டதாரிகள் வேலை வாய்ப்புக்கோரி விண்ணப்பித்ததையடுத்து அவர்கள் இப்பொழுது எவ்வேலையிலும் ஈடுபடவில்லை என உறுதி மொழி வழங்கக் கோருவது தெரிந்ததே.

# மக்களின் உரிமைகளைப் புறந்தள்ளி சனாதிபதியைப் பாதுகாக்க முயல்கின்றனர்

### ஜே.வி.பி.யினர் மீது ரணில் குற்றச்சாட்டு

மக்களின் உரிமைகளைப் பேணுவதாகக் கூறிபதவிக்கு வந்த ஜே.வி.பி.யினர் இன்று தமது செல்வாக்கினை உயர்த்தும் பொருட்டு மக்களின் உரிமைகளை புறந்தள்ளி சனாதிபதியின் உரிமைகளைப் பாதுகாக்க முன்னிற்கின்றனர் என கேகாலையில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தாவது; பதவிக்கு வந்து மூன்று மாதங்கள் முடிவுற்ற போதும் மக்களுக்கு அளித்த வாக்குகளிலிருந்து நழுவி வருவதாகவும் 2001ஆம் ஆண்டு பதவிக்குவந்ததமது அரசாங்கத்தைத் திடீரென கலைத்து பதவிக்கு வந்த ஜே.வி.பி.– சிறில. சு.க.கூட்டணி தற்போது ஆட்சி நடத்தமுடியாது திக்குமுக்காடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

2001ஆம்ஆண்டு பதவியேற்ற ஐ.தே.முன்னணியின் பிரதமர் அமைச்சர்களுடன் இணைந்து செயற்பட்டுதனது நிறைவேற்று அதிகாரத்துடன் ஆட்சிநடத்த சனாதிபதிக்கு முடியும் என்றே அரசியலமைப்பில் கூறப்படுகிறது எனினும் மூன்று அமைச்சுக்களை கையேற்றதுடன் சந்திரிகா பிரச்சினையை தோற்றுவித்தார் எமக்கு ஆட்சிநடத்தஅவகாசம் கொடுக்காத சந்திரிகாவின் அரசுக்கு நாம் 3மாதம் அவகாசம் கொடுத்தோம் இருப்பினும்அளித்த வாக்குறுதிகளை அது இதுவரையும் நிறைவேற்றத் தவறிவிட்டது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட 4பேர் சிலாபம் பொலிசாரால் கைது

இராணுவத்தைச் சேர்ந்தவர்களெனக் கூறிக்கொண்டு பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட 04 பேரை சிலாபம் பொலிசார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

சிலாபம் உட்பட பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் இவர்கள் தொடர்புடையவர்களென பொலிசார் தெரிவித்துள்ளனர். இவர்களிடமிருந்து கூரிய ஆயுதங்கள் இரண்டு உட்பட 04 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுக்காக பயன்படுத்திய இராணுவச்சீருடைகள் உட்படபல்வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸ் குற்றப் புலனாய்வுப்பிரிவுதெரிவித்துள்ளது.

## சுட்டுக் கொலை

(கொழும்பு)

மோட்டார் சைக்கிளில் சென்றவர் இனந்தெரியாத குழுவொன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.சென்ற புதன் சிறிலங்காவின் பன்னடகல என்னுமிடத்தில் இச் சம்பவம்இடம்பெற்றுள்ளது.சுனில் (வயது 31) என்பவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது வாகனமொன்றில் வந்த குழுவொன்று இவரை சுட்டுக்கொன்றுள்ளது.

தனிப்பட்ட விரோதம் காரணமாகவே இக்கொலை இடம் பெற்றிருக்கலாம் எனப் பொலிசார் கூறியுள்ளனர்.

# மொறட்டுவவிலிருந்து களனிவரை ஜாதிக ஹெல உறுமயவினர் பாதயாத்திரை

ஜாதிக ஹெல உறுமய கட்சியினர் நேற்று முன்தினம் மொறட்டுவையில் இருந்து களனி வரையில் பாத யாத்திரை ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இப்பாத யாத்திரையில் கட்சியின் உறுப்பினர்கள் பௌத்த பிக்குகள் கலந்துகொண்டனர். அரசாங்கத்தரப்பு உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலே நடந்து கொண்டவிதம் பௌத்த தர்மத்திற்கு எதிரானது என்றும் தமது பாராளுமன்றஉறுப்பினர்கள் பாராளு மன்றத்திலே தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மேற்கொள்ளப்பட்ட இப்பாத யாத்திரை களுத்துறையில் ஆரம்பமாகி மொறட்டுவவில் முடிவடைந்து பின்னர் மொறட்டுவையில் ஆரம்பமாகி களனிவரைக்கும் சென்று களனி பௌத்தவிகாரையில் முடிவடைந்தது. இதில் உரை நிகழ்த்திய ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்னதேரர் கூறுகையில், ஆட்சியில் இருக்கும் இந்த அரசாங்கம் தமது கட்சியினர் மீது சேறு பூசும் நடவடிக்கையில்ஈடு பட்டிருக்கிறதென்றும் தமது கட்சியினர் மீது தொடர்ந்து குற்றம் சாட்டிவருவதாகவும் கூறினார். குறிப்பாக கடந்த நாடாளுமன்றத்திலே தமது கட்சி உறுப்பினர்கள் இருவர் தாக்கப்பட்டமைக்கு அரசாங்கம் பகிரங்க மன்னிப்புக் கோரும் வரைக்கும் அரசாங்கத்திற்கு தாங்கள் ஆதரவு வழங்கப்போவதில்லை எனக் கூறினார். மேலும் அவர் கூறுகையில், அரசாங்கம் மதமாற்றச்சட்டம் ஒன்று கொண்டுவர இருந்த வேளையில்தான் சனாதிபதி சென்ற பாராளுமன்றத்தைக் கலைத்தார். இதனால் சனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கைகளையே தாம்மேற்கொண்டுவருவதாகத் தெரிவித்தார். (32)

# கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு பெரு விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பம்

கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு நடாத்தப்படும் பெரு விளையாட்டுப்போட்டிகளின் முதல் நாள்நிகழ்வு நேற்றுப்பிற்பகல் முல்லைத்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளது.

முல்லைமாவட்ட கடற்தொழிலாளர் சமாசமும் அதன் இணைநிறுவனங்களும், தமிழீழ விளையாட்டுத்துறையினரும் இணைந்து நடாத்தும் மேற்படி போட்டிகளின் முதல் நாள் போட்டிகள் நேற்று மாலை 4.00 மணிக்கு முல்லை பொதுவிளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளது. முதல் நிகழ்வாக முல்லை கடற்றொழிலாளர் சமாசத்தின் முன்பாக இருந்து பாடசாலை மாணவர்கள் கரும்புலிகளின் பொது உருவப்படத்தை தாங்கியவாறுமுல்லை பொது விளையாட்டு மைதானம் நோக்கி அணிவகுத்து ஊர்வலமாக வந்தடைந்தனர்.

இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரை முல்லை மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் குரூஸ் மற்றும் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் மரியராசா உள்ளிட்டோர் ஏற்றிவைத்தனர். அடுத்து தமிழீழ தேசியக்கொடியை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஏற்றிவைத்தார். நிகழ்வில் கரும்புலிகளின்பொது உருவப் படத்திற்கான ஈகச்சுடரை மேஜர் நிதர்சனின் தாயார் ஏற்றிவைத்தார்.

இதனைத்தொடர்ந்து ஒலிம்பிக் தீபத்தை ஏற்றும் நிகழ்வு ஆரம்பமானது. ஒலிம்பிக்தீபத்தை முன்னாள் குத்துச்சண்டை, மல்யுத்தம் ஆகிய விளையாட்டுகளில் தலைசிறந்த வீரராகவிளங்கிய திருஞானதீபம் அல்பிறட், அன்ரனி, குண்டெறிதல், தடைதாண்டல் ஆகியவிளையாட்டுக்களில் முல்லைமாவட்ட ரீதியில் முதலிடத்தைப்பெற்ற கருணாகரன் யூடிகியா,அருணா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து போட்டியாளர்கள், நடுவர்கள் சத்தியபிரமாணம் செய்து கொண்டனர். இதனை அடுத்து முதல்நாள் போட்டிகளை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஆரம்பித்து வைத்தார்.இதில் முதலாவதாக முல்லை பாரதி வித்தியாலய மாணவ மாணவிகளின் உடற்பயிற்சி கண்காட்சி இடம் பெற்றது. அடுத்து முன்பள்ளி சிறார்களுக்கான பாடசாலை செல்வதற்கு தயாராகும் போட்டி ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி எதிர்முல்லை அணிகளுக்கிடையிலான சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இடம் பெற்றது. இது வெற்றி தோல்வி எதுவுமின்றி நிறைவு பெற்றது.

அடுத்ததாக ஆண்கள், பெண்கள் இரு பாலாருக்குமான தலையணைச்சண்டை போட்டி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்துஆண், பெண் இரு பாலாருக்குமான கபடிப்போட்டிகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து நேற்றைய முதல் நாள் போட்டிகள் நிறைவு பெற்றன.





முன்னதாக உதைபந்தாட்டப் போட்டி மைதானத் திறப்பு நிகழ்வு இடம்பெற்றது. மைதானத்தை முல்லைத்தீவு பிரதேச சபை செயலாளர் கிருஸ்ணபிள்ளை நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். நேற்றைய உதைபந்தாட்டப் போட்டியை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா உள்ளிட்டோர் ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் நாள் போட்டிகள் இன்றுமாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டிகளில் யாழ். எதிர் மன்னார் அணிகளுக்கிடையேயானஉதைபந்தாட்டப் போட்டி ஆண், பெண் இரு பாலாருக்குமான கயிறு இழுத்தல் என்பன இடம்பெறும் இவற்றின் இறுதியில்மல்யுத்தம், குத்துச் சண்டை ஆகிய போட்டி (தெரிவு நிகழ்ச்சி) முல்லை சுற்றுலா மைதானத்தில் இடம்பெறும் (லோ.ச20)

# அரசியல் பணிக்குச் செல்ல படையினர் முட்டுக்கட்டை

## -புல்மோட்டை செல்லாது எழிலன் திரும்பினார்-

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கே புல்மோட்டைக் கிராமத்துக்கு அரசியல் பணிகளை மேற்கொள்வதற்காகச் சென்ற விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனை யான்ஓயாப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர்தடுத்து நிறுத்தினர். தங்களின் துணையுடன் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று படையினர் வற்புறுத்தியதையடுத்து, எழிலன் தனது புல்மோட்டைப் பயணத்தை இடையில் நிறுத்திக்கொண்டு திருகோணமலை நகருக்குத் திரும்பிய சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலைத் தலைவரிடம் எழிலன் இச்சம்பவம் தொடர்பாக முறையிட்டார். தாம் அரசியல் பணிகளை மேற்கொள்வதற்கு இராணுவத்தினர் தடையாக இருந்தது குறித்து விசாரணை நடத்தும் படியும் எழிலன் கண்காணிப்புக்குழுவை கேட்டுள்ளார்.

"புல்மோட்டைக் கிராமத்தில் உள்ள முஸ்லிம் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க எனதுபயணத்தை மேற்கொண்டேன். யான்ஓயா வைத் தாண்டியதும் இராணுவத்தினர் மறித்து விசாரணை செய்தனர். அரசியல் பணியைமேற்கொள்வதற்கு அக்கிராம மக்களின் வேண்டுகோளின் பேரில் செல்கின்றேன் என்று படையினருக்குக் கூறினேன். போக அனுமதிக்க முடியாது என்று படையினர் தடுத்தனர். காலை 11.30மணியளவில் படையினருக்கும் எமக்கும் இடையில் இது சம்பந்தமாக இழுபறி நிலவியது. பின்னர் படையினர் தங்களின் உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டனர். அதன் பின்னர் தமது வழித்துணையுடன் புல்மோட்டை செல்லஅனுமதிப்பதாக இராணுவத்தினர் எம்மிடம் தெரிவித்தனர்.

அரசியல்பணியை மேற்கொள்ளச் செல்லும் எமக்கு படையினரின் வழித்துணை எதற்கு? தேவையில்லை என்று கூறினோம். தொடர்ந்தும் படையினர் தமது நிலையைத்தளர்த்தாது இருக்கவே புல் மோட்டைப் பயணத்தை நடுவில் கைவிட்டு திருகோணமலைதிரும்ப வேண்டியதாயிற்று" என்று எழிலன் தெரிவித்தார். எழிலன் பின்னர் இது தொடர்பாக செய்த முறைப்பாடு குறித்து,திருகோணமலையிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர்விசாரணை நடத்துவதாகத்தெரியவருகிறது. (25)

### மட்டக்களப்பு-அம்பாறை

# தடைமுகாமூடாகச் செல்வோரை பதுங்கியிருந்து படப்பிடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு -அம்பாறை தடைமுகாம்களூடாக மக்கள் செல்லும் வேளை இராணுவத்தினர் பதுங்கியிருந்து வீடியோப் படம் பிடிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தடைமுகாம்களூடாக மக்கள் நெருக்கமாகச் செல்லும் போது இடையிடையே இராணுவத்தினர் இவ்வாறு பதுங்கி இருந்து வீடியோப் படம் எடுப்பதாகக் கூறப்படுகிறது.

# முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த மு.கா. இற்கு அருகதை கிடையாது

## ஐக்கிய சனநாயகக் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கு அதிகாரம் கிடையாதென ஐக்கிய சனநாயகக் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் ஏ.ஜே.எம்.முஷாமின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவம், கட்சியின் கொள்கைகளைத் தனிப்பட்ட தேவைகளுக்காக ஐக்கிய தேசியக்கட்சிக்கு தாரை வார்த்துக் கொடுத்துள்ளதெனவும், ஆகவே முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு எந்தவித அருகதையும் கிடையாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தவிசாளர் பசீர் சேகுதாவும், அக்கட்சியின் அரசியல் யாப்பு அதிகாரசபையின் உறுப்பினர் நிஜாமுதீனும், ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்துவத் தைப் பெற்றுள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் உயர்பீட அங்கத்தவர்கள் இன்னொரு கட்சியின் உறுப்பினர்களாக அங்கத்துவம் பெற்றுவிட்டால் அந்தக் கட்சியின் யாப்புக்குள்ளேயே இவர்கள் கொண்டுவரப்படுவார்கள்.

எனவே ரவூப்ஹக்கீம் மற்றும் இவர்களுக்கு முஸ்லிம் காங்கிரசின் தனித்துவத்தைக் காப்பாற்ற அருகதை கிடையாதெனவும் அவர் தெரிவித்தார்.

## கரும்புலிகளின் உரு...

பள்ளங்காட்டுச் சந்தி உதயசூரியன் ச.ச.நிலைய்ம், 10.30 மணிக்கு மானிப்பாய் நகர், 10.45 மணிக்கு மருதடிச்சந்தி, 11.00 மணிக்கு சீரணிச் சந்தி, 11.30 மணிக்கு சங்கானை நகர், 12.00 மணிக்கு சித்தன் கேணிச்சந்தி, 12.15மணிக்கு வடலியடைப்பு, மாலை 12.30 மணிக்கு பண்டத் தரிப்பு நகர், 1.30மணிக்கு தொட்டிலடி சந்தி, 2.00 மணிக்கு மாகியப்பிட்டிச்சந்தி, 2.15மணிக்கு அளவெட்டி முற்போக்கு வாலிபர் ச.ச.நிலையத் துடி, 2.45 மணிக்கு அளவெட்டி ப.நோ.கூ.சங்கத்துடி, 3.15 மணிக்கு தெல்லிப் பளை நகர், 3.45மணிக்கு மல்லாகம் சந்தி, 4.15 மணிக்கு சுன்னாகம் நகர், 4.45மணிக்கு மருதனார்மடசந்தி, 5.30மணிக்கு உரும்பிராச் சந்தி, இரவு 6.30 மணிக்கு கோண்டாவில் சந்தி, 7.00மணிக்கு இருபாலைச் சந்தி, 7.45 மணிக்கு கோப்பாய்ச் சந்தி, 8.30 மணிக்கு புத்தூர் சந்தி, 9.30 மணிக்கு அச்சுவேலி நகர் ஆகியஇடங்களைச் சென்றடையும். நாளை காலை 8.00மணிக்கு கைதடிச் சந்தியிலிருந்து கண்டி வீதியூடாக 1.00 மணிக்கு சாவகச்சேரி நகர், 11.30 ம்ணிக்கு கொடிகாமம் நகர், மதியம் 1.00மணிக்கு வரணி மகாவித்தியாலயம், மாலை 5.00மணிக்கு நெல்லியடிச் சந்தியைச்சென்றடையும். (33)

## மலேசியா ஆதரவு

இலங்கையில் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு மலேசியா அரசு ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளதென இலங்கைக்கான மலேசியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

புத்தளத்திற்கு நேற்று விஜயம் செய்த வேளை அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## கரும்புலிகள்...

நிறுவனங்களின் ஊழியர்கள் கரும்புலி மாவீரர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கவுள்ளனர். திருகோணமலை மாவட்டத்திலும் கரும்புலிகளின் திரு வுருவப் படங்களைத் தாங்கிய ஊர்தி மக்கள் அஞ்சலிக்காக பவனியாகக் கொண்டு செல்ல ஒழுங்கு படுத்துப்பட்டுள்ளதோடு கரும்புலிகள் நாள்நிகழ்வுகள் நடாத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கரும்புலிகள் தினநிகழ்வு மூதூர் கிழக்குசேனையூரில் நடைபெறும்.

மட்டு. அம்பாறை மாவட்டத்தில் பல பகுதிகளும் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளன இறுதி நாள் நிகழ்வுகள் ஆண்டா ன்குள கோட்டத்தில் ஜெயா அவர்களின் தலைமையிலும் அம்பாறையில் ஆலையடி வேம்பு கலாச்சார மண்டபத்தில் அம்பாறை அரசியல் துறைபொறுப்பாளர் குயிலின்பன் தலைமையிலும் சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளில் அலங்காரவளைவுகளும் சிவப்பு மஞ்சள் கொடிகளும் கட்டப் பட்டுள்ளதோடு நேற்றுத் தொடக்கம் முல்லைத்தீவு நகரப்பகுதியில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் விளையாடடு விழாவும் நடாத்தப் பட்டுவருவதோடு இறுதிநாள் பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மாவீரர்களின் திருவுருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி மக்கள் அஞ்சலிக்காகப் பவனி வர ஆரம்பித்துள்ள இதேவேளை இறுதிநாள் நிகழ்வுகளை நெல்லியடி மத்திய கல்லூரியிலும் புங்குடுதீவு பெருங்காட்டுச் சந்தியிலும் சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன. (லோ,ச,மி,36,25)

## பௌத்த தர்மத்தை....

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க ஜாதிக ஹெலஉறுமயவின் ஆதரவைக் கோரும் முயற்சிகள் ஒரு புறம் நடந்துகொண்டிருக்கின்றன. இவ்வாறான முயற்சியில் பாராளுமன்றத்தில் தம்மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு அரசாங்கம் மன்னிப்புக்கோரவேண்டுமென ஜாதிக ஹெலஉறுமய பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வேளையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இக் கருத்துக்கள் காரணமாக மாகாண சபைத் தேர்தலுக்குப்பின் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவது என்றஇணக்கப்பாட்டிற்கு வந்திருந்த ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாட்டில் எத்தகைய மாற்றத்தைக் கொண்டு வருமென அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்புகின்றனர். (32)

## நாட்டை...

நிறுத்தி பௌத்த பிரதிநிதித்துவம் பௌத்ததேரர்கள் கொண்டுள்ள யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.(32)

# கரும்புலிகள் நினைவு மண்டபம் இன்று மாங்குளத்தில் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கரும்புலிகள் நினைவு தினத்தை முன்னிட்டு இன்று மாங்குளத்தில் கரும்புலிகள் நினைவு மண்டபம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இன்று காலை 10.00 மணிக்கு அண்மையில் திறந்துவைக்கப் பெற்ற கரும்புலிகள் லெப்.கேணல் போர்க்கின் உருவச்சிலைக்கு அருகாமையில் மேற்படி மண்டபம் அமைக்கப்பெற்று திறந்துவைக்கப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.